வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959


Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 24.05.2025 சனிக்கிழமை இதழ் : 145 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.






காணி தொடர்பான வர்த்தமானி:

# அமைச்சரவையுடன் பேசி அடுத்த சந்திப்பில் பதில்!



## பிரதமர் ஹரிணி அமரசூரிய உறுதி

- வர்த்தமானியை மீளப்பெற தமிழ் பேசும் எம். பி.க்கள் வலியுறுத்து
- வர்த்தமானி மீள பெறப்படுவதற்கு அரச அதிகாரிகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, மே 24

வடக்கு மாகாணத்தில் சுமார் 5 ஆயிரத்து 700 ஏக்கர் வரையான காணிகள் தொடர்பில் கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியான வர்த்தமானி குறித்து அமைச்சரவை மட்டத்தில் பேசி அடுத்த பாராளுமன்ற அமர்வின் போது நடைபெறும் சந்திப்பில் பதில் அளிக்கப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

11

தங்க முலாம் துப்பாக்கி விவகாரம்:

## சுதந்திர கட்சியின் செயலர் துமிந்த திஸநாயக்க கைது!

கொழும்பு, மே 24

வெள்ளவத்தையில் தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சரும் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளருமான துமிந்த திஸநாயக்க நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

பம்பலப்பிட்டி - திம்பிரிகஸ்யாயவில் உள்ள அவரின் இல்லத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் அவரை கைது செய்தனர். குறித்த துப்பாக்கி அவரின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

முன்னதாக, கொழும்பு - வெள்ளவத்தை ஹவலொக் சிற்றி பகுதியிலுள்ள ஆடம்பர

11

## ரூ. 20 இலட்சம் கோடி கடனுக்கு என்ன நடந்தது?

ஆவணங்கள் ஏதுமில்லை என்கிறார் பிரதி அமைச்சர்

கொழும்பு, மே 24

அரச முறை கடன்களில் 20 இலட்சம் கோடி ரூபாய்க்கு என்ன நடந்தது என்பதற்கு முறையான ஆவணங்கள், குறிப்புகள் ஏதுமில்லை - என்று நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரிய பெரும தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரசாங்கம் என்ற அடிப்படையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடன் பெற்றுக்கொள்ள முடியும். அரசாங்கம் பிணையாகி அரச நிறுவனங்கள் சர்வதேச பிணைமுறிகளில் இருந்து கடன் பெற்றுக் கொள்ளும் வசதிகளும் காணப்படுகின்றன. அத்துடன் நிறுவன கட்டமைப்பின் ஊடாக வெளிநாட்டு நிறுவனங்களில் கடன் பெறமுடியும். கடன் பெறும் போது வெளிப்படைத் தன்மை மற்றும்

11

## பெருந்தொகை துப்பாக்கி ரவைகளுடன் இருவர் கைது!

வவுனியா, மே 24

வவுனியாவில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை துப்பாக்கி ரவைகள் மற்றும் விசேட அதிரடி படையினரின் சீருடைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் ஒருவர் விசேட அதிரடிப் படையை

11

## நல்லூரில் அசைவ உணவகம் சைவ உணவகமாக மாற்றம்!

யாழ்ப்பாணம், மே 24

நல்லூர் ஆலய சூழலில் திறக்கப்பட்ட அசைவ உணவகம் மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து சைவ உணவகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக அதன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நல்லூர் ஆலயம் அருகில் யாழ். மாநகர சபை முன்பாக இலங்கையின் முன்னணி உணவகம் ஒன்று தனது கிளையை திறந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

11

## மெய்நிகர் நீதிமன்ற வருகை சட்டபூர்வமானதாக்கப்படும்!

நீதி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே 24

உயிர் அச்சுறுத்தல் உள்ளவர்கள் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காமல் சிறைச்சாலையில் இருந்தவாறு நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் பங்குபற்ற முடியும். இதேபோல், வெளிநாடுகளில் உள்ளவர்களும் வழக்கு விசாரணைகளுக்காக இனி இலங்கைக்கு வருகைதர வேண்டியதில்லை. தூதரகம் ஊடாக மெய்நிகர் வழியில் சாட்சியமளிக்க முடியும். குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் ஊடாக இதற்கான

11

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி!

யாழ்ப்பாணம், மே 24

மரத்தில் தடி வெட்டிய போது, அது மின் கம்பியில் சிக்கியதில் மின்சாரம் தாக்கி அதனை வெட்டிய குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

சுன்னாகம், மின்சார நிலைய வீதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் இ.சிறீகாந்தன்

11

## இனப்படுகொலையை அங்கீகரிக்க அரசாங்கத்துக்கு முதுகெலும்பில்லை!

கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, மே 24

"இனப்படுகொலையை அங்கீகரிப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இல்லை", - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "இந்த நாட்டின் அரசாங்கத்துக்கு இனப்படுகொலையை ஒரு குற்றமாக அங்கீகரிப்பதற்குக்கூட தைரியம் இல்லை. குற்றமாக அங்கீகரிக்கப்பட்டால் நீங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு செல்ல நேரிடும். நீங்கள் அதனை விரும்ப

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








யாழ்ப்பாணம் - இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்ற போது...! (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# புங்குடுதீவு கண்ணகையம்மன் ஆலய நிர்வாகத்துக்கு எதிராக போராட்டம்!



யாழ்ப்பாணம், மே 24

புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தின் நிர்வாகத்துக்கு எதிராக நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலகம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டம் நடத்தியவர்கள், "தற்போதைய நிர்வாகம் உடன் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும்", "கோவில் ஆன்மீக தலமா வியாபார நிலையமா?", "கோவிலில் களவு போனால் முறைப்பாடு செய்வது யாரிடம்?", "பொலிஸ் முறைப்பாட்டை தலைவர் வாபஸ் வாங்க முற்பட்டது ஏன்?", "தடயங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது - அம்மனுக்கு சேர்ந்த கோடிக் கணக்கான ரூபாய்களை விழுங்கியது யார்?", என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தின் நிறைவில் பிரதேச செயலாளரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர், "எதிர்வரும் 29ஆம் திகதி ஆலய நிருவக சபையினரையும் போராட்டத்தை முன்னெடுத்த மக்களையும் அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடப்படும்", என்று கூறினார். (ஐ)

## சிலப்பதிகார விழாவில் இன்று


யாழ்ப்பாணம், மே 24

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் சிலப்பதிகார விழா அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

இதில், இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கலைஞர் கந்தையா வடிவேலு அரங்கில் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

"பழசை மறந்த பழசுகள்", என்ற தலைப்பில் சிலம்பிசை கோ. கோகிலரதன் நடுவராகக் கொண்டு கவியரங்கு நடைபெறும். தொடர்ந்து, "பாண்டியன் பாவை", என்ற தலைப்பில் வாமதேவ சிவசதீபன் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். பின்னர், இ. ஜெயராஜ் ஆணையாளராக தலைமை வகிக்கும் இலக்கிய ஆணைக்குழு நிகழ்ச்சி "நீதியை நிலைநாட்டி தியாகம் செய்தவர்" "தசரதனே" என்ற தலைப்பில் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், வேல். நந்தகுமார், "பாண்டியன் நெடுஞ்செழியனே" என்ற தலைப்பில் பேராசான் ஐ. கதிகாமசேகரன், ம. கோசலை, "மனுநீதி கண்ட சோழனே" என்ற தலைப்பில் பேராசிரியர் சிறீ பிரசாந்தன், பரா. ரமேஷ் ஆகியோர் உரையாற்றுவர். (ஐ)

## வவுனியா மாநகர சபையால் வியாபார கொட்டகை அகற்றம்



வவுனியா, மே 24

வவுனியா மாநகர சபையால் பழைய பேருந்து நிலையத்துக்கு அருகாமையில் காணப்பட்ட வியாபார கொட்டகை நேற்று அகற்றப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையம் அருகாமையில் அமைந்துள்ள தனிநாயகம் அடிகளாரின் சிலை அருகே செருப்பு தைக்கும் வியாபார கொட்டகையே இவ்வாறு அகற்றப்பட்டது. அந்தக் கொட்டகையில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் வர்த்தகர்கள், பொதுமக்கள் முன்வைத்த முறைப்பாடுகளுக்கு அமையவே இந்தக் கொட்டகை அகற்றப்பட்டது. எனினும், வியாபார நிலையத்தை நடத்தியவருக்கு வேறு இடமும் வழங்கப்பட்டது.

மேலும், இந்தத் தொழிலில் ஈடுபட்ட விசேட தேவைக்கு உட்பட்ட பெண்ணை காப்பகம் ஒன்றில் இணைப்பதற்கான நடவடிக்கையும் மாநகர சபை வருமான வரி பரிசோதகரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ- 10)

## நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், மே 24

கோகிலா மகேந்திரன் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பான "இணைகரத்தின் அயற் கோணங்கள்" புத்தக அறிமுக நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

சற்குணம் சத்தியதேவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் த. அஜந்தகுமார், கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய ஆசிரியை தமயந்தி கணேசானந்தன் ஆகியோர் உரைகளை ஆற்றுவர்.

## 20 கோடி டொலர் பெறுமதியான வாகனங்கள் இதுவரை இறக்குமதி!

கொழும்பு, மே 24

இறக்குமதி தடை நீக்கப்பட்டதில் இருந்து இதுவரையில் 20 கோடி டொலர் பெறுமதியான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கிய தெரிவித்துள்ளது.

அத்துடன், இதுவரையில் 45 கோடி டொலருக்கான கடனுறுதிக் கடிதம் விநியோகிக்கப்பட்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டு, வாகன இறக்குமதிக்கு 100 கோடி டொலரை ஒதுக்குவதாக அரசாங்கம் ஏலவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இளம்குடும்பஸ்தரின் சடலம் புதரிலிருந்து மீட்கப்பட்டது!

முல்லைத்தீவு, மே 24

புதுக்குடியிருப்பில் புதரிலிருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சடலம் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலம் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. எனினும், அவரின் மரணத்துக்கான காரணம் தெரிய வரவில்லை. சடலம் பிரேத பரிசோதனைக்காக புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் புதுக்குடியிருப்பு 10ஆம் தொகுதியை சேர்ந்த 24 வயது இளம் குடும்பஸ்தராவார்.

மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், மே 24

சுதுமலை சிறீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறும் இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் ஜூன் 10ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 11ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஜூன் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

## வீரர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 24

வலுத்தூக்கல் வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரி (சென். பற்றிக்ஸ்) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி குமாரசாமி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்வி பணிமனை பிரதி கல்வி பணிப்பாளர் (உடற் கல்வி) வி. சாரங்கன், கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் செ. சத்தியன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.05.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## காணி அபகரிப்பை தடுக்குமா சர்வதேசம்?

உள்ளூராட்சித் தேர்தலை ஒரு கூட்டணியாக எதிர்கொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தல் முடிவுகள் வெளியானமையைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள தூதுவர்களைத் தொடர்ச்சியாக சந்தித்து வருகிறார். இதன் தொடர்ச்சியாக தென்னாபிரிக்க தூதுவரையும் சந்தித்திருக்கிறார். “தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் காணி அபகரிப்பில் ஈடுபட முயற்சிக்கிறது. அதனை தடுத்து நிறுத்துவதற்கு நீங்கள் கொழும்பின்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்”, என்பதே பொன்னம்பலம் தலைமையிலான அணியினரின் கோரிக்கையாக இருக்கிறது.

2009இற்கு பின்னரான அரசியல் சூழலுக்கு தலைமை தாங்கிய சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறான பல சந்திப்புகளை அந்தக் காலத்தில் மேற்கொண்டிருந்தது. கொழும்புக்கு வருகை தரும் அமெரிக்க, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திரிகள் குழாம் சம்பந்தனை சந்திக்காமல் செல்வதில்லை. அவர்கள் அனைவராலும் அன்றைய சூழலில் தமிழர் தலைவராக சம்பந்தனே அடையாளம் காணப்பட்டிருந்தார். இவ்வாறான சந்திப்புகளில் சம்பந்தனுக்கு துணையாக சுமந்திரன் இருந்திருக்கிறார். சம்பந்தனுக்குப் பின்னரான சூழலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் சம்பந்தனுடன் அனைத்து சந்திப்புகளிலும் பங்குகொண்ட ஒருவர் என்னும் வகையில் சுமந்திரனுக்கும் இராஜதந்திர உலகம் தொடர்பான அனுபவம் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், இவ்வாறான சந்தர்ப்பங்களில் சம்பந்தனின் நகர்வுகளை பொன்னம்பலம் விமர்சனம் செய்து கொண்டிருந்தார். சம்பந்தன் விடயங்களை சரியாகக் கையாளவில்லை என்று குற்றஞ்சாட்டினார். ஆனால், இன்று அவ்வாறான சந்திப்புகளில் புதிதாக ஈடுபடுவது போல் செயல்படுகிறார்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தூதுவர்களை சந்திப்பதற்கு அனுமதி கோரினால் அவர்கள் நிச்சயம் சந்திப்பார்கள். அந்த அடிப்படையில்தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினரையும் அவர்கள் சந்திக்கின்றனர். ஆனால் கேள்வி, சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கும்போதுதான் அனைத்து விடயங்களும் நடந்து முடிந்தன - இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலும், குறிப்பாக தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கு வெளியுலகில் தலையீடு செய்வதற்கான வாய்ப்புகள் பெரியளவில் இல்லை.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருக்கின்றபோது நல்லிணக்க முயற்சிகளுக்கு தென்னாபிரிக்க ஆலோசனைகளைப் பெறுவதென்று முடிவு செய்யப்பட்டது. 2015இல் மகிந்த தோல்வியுற்றமையைத் தொடர்ந்து புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ரணில் - மைத்திரி அரசாங்கம் தென்னாபிரிக்க ஆலோசனைகளின் அடிப்படையில் செயல்படப் போவதாகக் கூறியது. அன்றைய சூழலில் நல்லிணக்கம் என்னும் பெயரில் அரசுசாரா நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பலர் தென்னாபரிக்காவுக்கு சுற்றுலா சென்றமையைத் தவிர, வேறு எதுவும் நடக்கவில்லை. இந்த விடயங்கள் பொன்னம்பலமும் அறியாதது அல்ல.

சர்வதேச தலையீடு தொடர்பில் சிந்திக்கத் தெரிந்த தமிழர்களுக்கு புதிதாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. சிந்திக்கத் தெரியாதவர்கள் - சிந்திக்க மாட்டோம் என்று அடம்பிடிப்பவர்கள் தொடர்பில் நாம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. அவர்களுக்கு மிஞ்சப் போவது அவர்களின் கற்பனைகள் தொடர்பான ஆத்ம திருப்தி மட்டும்தான்.

சர்வதேச அரசியலைப் புரிந்து கொள்வது தொடர்பில் 'ஈழநாடு' தொடர்ந்தும் போதியளவு விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கிறது. தங்களுடைய நலன்களுக்கான தலையீடுகளை நாங்கள் கோராமலேயே அவர்கள் மேற்கொள்வார்கள். ஆனால், இன்றைய சூழலில் இராஜதந்திர சம்பிரதாயங்களின் அடிப்படையில் எவ்வாறு தமிழ் பிரதிநிதிகளை சந்திக்கிறார்களோ அவ்வாறுதான் அரசாங்க பிரதிநிதிகளையும் சந்தித்து விடயங்களை சுட்டிக்காட்டுவார்கள். ஒரு தேநீருடன் விடயங்கள் முடிந்துவிடும். கடந்த 15 வருடங்களாக இதுதான் நடந்தது - இனியும் இதுதான் நடக்கும். ஒருவேளை அடுத்த ஆட்சி மாற்றம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் தேவையிருந்தால் நிச்சயம் கதவுகளை தட்டுவார்கள்.

## தொல்பொருள் திணைக்களத்தின் வெற்றிடங்களை நிரப்ப அனுமதி!

கொழும்பு, மே 24

தொல்பொருள் திணைக்களத்தில் 8 ஆண்டுகளாக நிலவும் 27 உதவி பணிப்பாளர் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களை இணைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரச சேவைக்கான ஆட்சேர்ப்புகளை மீளாய்வு செய்வதற்கான குழு இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் பிராந்திய நிர்வாக நடவடிக்கைகள் உள்ளிட்ட சேவைகளை செயல்திறனுடன் முன்னெடுப்பதில் தடைகள் காணப்பட்டன என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் துசித மெண்டிஸ் தெரிவித்தார்.

தொல்பொருள் திணைக்களத்தில் நிலவும் 7 பணிப்பாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது அரசாங்கத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. 822 காவலர் கள், 305 தொல்பொருள் உதவியாளர்கள், ஊழியர் தர பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியும் அரச சேவைக்கான ஆட்சேர்ப்புகளை மீளாய்வு செய்வதற்கான குழுவிடம் கோரப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

## கல்வித்துறை துஷ்பிரயோகங்களை தடுக்குமாறு வலியுறுத்தி போராட்டம்!

கொழும்பு, மே 24

பாடசாலைகள் மற்றும் மேலதிக வகுப்புகளில் நடக்கும் பாலியல் துன்புறுத்தல்கள், பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகளுக்கு தீர்வு காணவேண்டும் என வலியுறுத்தி கண்டியில் பல அமைப்புகள் இணைந்து வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

கண்டி ஜோர்ஜ் சில்வா பூங்கா முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை சட்ட ஆதிக்கத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம், கண்டி சிவில் அமைப்புகள், தொழிற் சங்கங்கள், சமூக செயற்பாட்டு ஒன்றியம், கண்டி பிரஜைகள் அமைப்பு, கண்டி புனருதய அமைப்பு, இலங்கை ஆசிரியர் சங்கம் (லங்கா குரு சங்கமய) என்பன இணைந்து ஒழுங்கு செய்திருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கொழும்பு கொட்டாஞ்சேனை மாணவி, சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் போன்றவர்களின் உயிர் மாய்ப்புக்கு காரணமான விடயங்களை தடுப்பதில் அதிகாரிகள் பின் நின்றமை மற்றும் அதற்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் போன்ற விடயங்களை சுட்டிக்காட்டி, பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சட்டத்தரணிகளான கலாநிதி ஆரியரத்ன, நவரத்ன பண்டா, கண்டி சர்வமத அமைப்பின் ஏற்பாட்டாளர் காமினி ஜயவீர உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## சிறுமிமீது பாலியல் துன்புறுத்தல்; குற்றவாளிக்கு 17 ஆண்டு கடூழியம்!

கொழும்பு, மே 24

7 வயது சிறுமியை கடத்தி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய 62 வயதான நபருக்கு 17 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

மேலும், குற்றவாளிக்கு 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன், அதனை செலுத்தத் தவறினால் கூடுதலாக ஓர் ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும். அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 30 இலட்சம் ரூபாயும் அவரின் தாயாருக்கு 10 இலட்சம் ரூபாயும் இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் இழப்பீட்டை செலுத்தாதுவிடின், மேலும் ஓர் ஆண்டு சிறை தண்டனை அனுபவிக்குமாறும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியும் 5 பெண் பிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலஞ்சம் பெற்ற மூவர் கைது!

கொழும்பு, மே 24

இலஞ்சமாக பெற்றதாகக் கூறப்படும் 40 இலட்சம் ரூபாய் பணத்துடன் மூன்று சந்தேக நபர்களை இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழு கைது செய்துள்ளது. சந்தேக நபர்களில் மோட் டார் போக்குவ ரத்துத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஒருவரும் அடங்குவார் என்று இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு நடத்திய சிறப்பு சோதனையைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே - 25 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 10
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : துவாதசி




**மேடம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமை யுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் துணிச்சலாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
இதுவரை இருந்த அலைச்சல் நீங்கள் குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். மறைமுகப் பிரச்னைகள் வரும். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**தனுசு**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும்.

**மீனம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

# யாழில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதில் வினைத்திறனான செயல்பட்டு வரும் சுகாதாரத்துறையினர், உள்ளூராட்சி துறையினர் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு தமது நன்றியைத் தெரிவித்தார். தற்போது மழை பொய்து வருவதால் ஏற்படக்கூடிய டெங்கு நோய் பரவல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். பொது மக்களுக்கான போதிய விழிப்புணர்வின் அவசியத்தையும் எடுத்துக்கூறினார். மேலும் விழிப்புணர்வு செயல்பாட்டுக்கு கிராம மட்ட உத்தியோகத்தர்களை வழிப்படுத்துமாறும் பிரதேச செயலாளர்களை கேட்டுக் கொண்டதுடன், கழிவகற்றல் தொடர்பாகவும் சரியான பொறிமுறையின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மேலும் இந்தக் கூட்டத்தில் முன்னெச்சரிக்கையாக டெங்கு நோய் வராமல் தடுப்பதற்குரிய வழிவகைகள் ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் டெங்கு பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

2. 2025 ஆம் ஆண்டு டெங்கு தாக்கத்தை கட்டுப்படுத்த பிரதேச செயலாளர் தமது பிரதேச செயலகங்களில் ஜூன் மாதம் முதல் 3ஆவது புதன்கிழமை 02.30 மணிக்கு டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டம் நடத்துவதுடன் இதன் கூட்டக்குறிப்பை மாவட்ட செயலகத்துக்கு அறிக்கையிடுமாறும் கோரப்பட்டது.

3. கிராம மட்ட டெங்குக் குழுக்கூட்டத்தை ஜூன் மாதம் முதல் 1ஆவது, 2ஆவது செவ்வாய்க்கிழமைகளில் நடத்துவதற்கும் அது தொடர்பான கூட்டக்குறிப்பை பிரதேச செயலாளருக்கு அறிக்கையிடுமாறும் கோரப்பட்டது.

4. ஜூன் முதலாம் திகதி முதல் முன்மாதிரியாக மாவட்ட செயலகம் மற்றும் பாடசாலைகளில் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனவும், அவ்வாறு தரம் பிரிக்காமல் காணப்படுமாயின் அதற்குரிய அபராதம் விதிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய திணைக்களங்கள் கால அவகாசத்துக்கு அமைய, ஜூலை முதலாம் திகதி முதல் இந்த நடைமுறையை பின்பற்றுமாறு தெரிவிக்கப்பட்டது.

5. பிளாஸ்ரிக், பொலித்தீனை கட்டுப்படுத்தல் தொடர்பான நடைமுறைகளை மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் பொது மக்களுக்கு அது தொடர்பான சரியான அறிவுறுத்தல்களை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது.

6. கழிவுகளை வீதிளில் கொட்டுவதை குறைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக யாழ்ப்பாணம் மாநகர சபையாலும் கோப்பாய் பிரதேச சபையாலும் கண்காணிப்பு கமரா பொருத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(எ)

# தொடர்ந்து தவறிழைக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை

## மக்கள் கடும் அதிருப்தி



யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம் மாநகர சபையானது தொடர்ச்சியாக பல்வேறு விதமான முறைகேடான செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இது குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தபோதும் அவற்றை சீர்செய்யாது அதே தவறுகளை தொடர்ந்து செய்த வண்ணம் உள்ளது.

வீதியில் குப்பைகளை கொட்டிவிட்டு செல்லுதல், கல்லுண்டாய் பகுதியில் உள்ள கழிவுப் பொருட்களுக்குத் தீ வைத்தல், மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்கள் உரிய முறைப்படி செயல்படாமை உள்ளிட்ட மேலும் பல முறைகேடான செயல்பாடுகள் குறித்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.


யாழ்ப்பாணம் நகர்ப் பகுதிகளில் சேகரித்த கழிவுப் பொருட்களை உழவியந்திரத்தில் எடுத்துச் செல்லும்போது உரிய முறையை பின்பற்றாமையை அவதானிக்க முடிந்தது. உழவியந்திரத்தின் பெட்டிக்குள் கழிவுப் பொருட்களை ஏற்றிய பின்னர் அதனை மூடாமல் திறந்த வண்ணம், கழிவுப் பொருட்கள் சேமிக்கும் இடத்துக்கு கொண்டு சென்றனர். இதன்போது பொலித்தீன் உள்ளிட்ட கழிவுப் பொருட்கள் காற்றில் பறந்து வீதிகளில் பரவின.


அந்த உழவியந்திரத்துக்கு இலக்கத் தகடும் காணப்படவில்லை. மாநகர சபையின் கழிவகற்றும் பல வாகனங்கள் இவ்வாறு இலக்கத் தகடு இன்றியே பணியில் ஈடுபடுகின்றன.

எனவே இவ்வாறான குறைபாடுகளை சீர் செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-05)

# யாழில் சர்வதேச புத்தகக் கண்காட்சி





யாழ்ப்பாணம், மே 24

சர்வதேச புத்தகக் கண்காட்சி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமான இந்தக் கண்காட்சி நாளை 25 ஆம் திகதி இரவு 09.30 மணி வரை நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியில் 30 கடைகள் தங்களிடமுள்ள புத்தகங்களை காட்சிப்படுத்தியுள்ளன.

இதில், க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் யாழ். மாவட்ட ரீதியாக முதலிடம் பெற்ற மாணவர்கள், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனால் கௌரவிக்கப்பட்டனர்.

(எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர அரசுதான் ஆளவேண்டும் பிரச்னைக்குத் தீர்வு வேண்டும்!

## மனோ கணேசன் வலியுறுத்து



கொழும்பு, மே. 24

**'ஆளுகின்ற அநுர அரசுக்கு தெளிவான மக்கள் ஆணை கிடைத்தது. ஆகவே அவர்கள் தான் நாட்டை தொடர்ந்து ஆள போகிறார்கள். ஆளவும் வேண்டும். ஆனால், பிரச்னைகளுக்கு தீர்வு வேண்டும்."-என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

நாட்டின் பொருளாதார சவால்கள் தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியவை வருமாறு-

ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. பல பிரபல ஆடை தொழில் முனைவர்கள் சத்தமில்லாமல் தம் தொழிற்சாலைகளை அயல் நாடுகளுக்கு கொண்டு போகிறார்கள். வேலை இழப்பு. உள்நாட்டில் பணப் புழக்கம் குறைகிறது. நாளை மின்சார விலை உயர்வு வருகிறது. ஆனால், 2024ஆம் ஆண்டு இலாபம் காட்டிய மின்சார சபை இன்று எப்படி ஆறு மாதத்தில் நட்டம் என்று கேட்டால் பதில் சொல்ல ஆளில்லை.

2024ஆம் ஆண்டு 5 விதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி, இவ்வருடம் 3.5 வீதமாக இருக்கும் என ஆசிய அபிவிருத்தி வங்கியும், 3.4 வீதம் என உலக வங்கியும் கூறுகின்றன.

அடுத்த வருடம், இது 3.2 வீதமாக குறையலாம் என அதே ஆசிய அபிவிருத்தி வங்கி கூறுகிறது.

இதில் 2028ஆம் ஆண்டில் இருந்து வெளிநாட்டு கடன் தவணைகள் கட்டவேண்டும்ம். இவை எதற்கும் அரசிடம் தீர்க்கமான தீர்வுகள் இல்லை. இனி ஒரு நெருக்கடி வருகிறதா? வந்தால் நாடு தாங்குமா?

முதல் சம்பவம், தைத்த ஆடை ஏற்றுமதி துறை சார் ஆடை தொழிற்சாலை ஒன்று ஆயிரத்து நானூற்றுக்கு அதிகமான தொழிலாளரை விலக்கி விட்டார்கள். ஏற்கனவே பல பிரபல ஆடை தொழில் முனைவர்கள் சத்தம் இல்லாமல் தம் தொழிற்சாலைகளை இந்தியாவுக்கும், வியட்நாமுக்கும் கொண்டு போகிறார்கள்.

ட்ரம்ப் வரி விவகாரத்தின் பிரதிபலிப்பு இதுவாகும். அது இன்னமும் முடிவுக்கு வரவில்லை. “ட்ரம்ப் நிர்வாகத்துடன் நாம் பேசி விட்டோம். இதோ, இலங்கை-அமெரிக்கா கூட்டு அறிக்கை வருகிறது” என அநுரவே சொன்னார். ஆனால், “அதெல்லாம் இல்லை. நூற்றுக்கணக்கான நாடுகளுடன் ஒவ்வொன்றாக கூட்டு-அறிக்கை வெளியிட முடியாது. இலங்கை அரசின் விளக்கம் பிழை,” என நான் கேட்ட போது அமெரிக்க தரப்பில் இருந்து விளக்கம் தந்தார்கள்.

இன்று வெளிநாட்டில் கடன் வாங்க முடியாத, இலங்கை அரசு, என்ன செய்கிறது? பண வீக்கம் கூடும் என்பதால், நாணய நிதிய நிபந்தனை காரணமாக பணத்தாள் அச்சடிக்கவும் முடியாது.

இந்நிலையில், 2024 செப்ரெம்பர் முதல் டிசெம்பர் வரைக்குள் மட்டும் உள்நாட்டு கடனாக திறைசேரி உண்டியல்கள் விற்று ரூ 44,000 கோடி கடன் வாங்கி அரச ஊழியர் சம்பளம் மற்றும் செலவுகளை சமாளிக்கிறது.

வெளிநாட்டில் இருந்து இந்தியா, சர்வதேச நாணய நிதி, உலக வங்கி போன்றவை தரும் நன்கொடை, குறை வட்டி அல்லது வட்டியில்லா கடன்கள் மட்டுமே.

உள்ளூராட்சித் தேர்தல் திருவிழா முடிவுக்கு வருகிறது. சந்தடி அடங்க, உண்மை பிரச்னைகள் மேலே எழுகின்றன. இந்த பிரச்னைகளுக்கு தீர்வு இல்லாத அரசு, அதே பழைய எதிர்க்கட்சி கால அரசியல் செய்து, அரச செலவுகளை குறைக்கிறோம், திருடர்களை பிடிக்கிறோம், என்று சொல்லி, சொல்லியே காலத்தை ஓட்டுகிறது.

செலவுகளை குறைப்பது, திருடர்களை பிடிப்பது நல்ல விடயம்தான். நாம் ஆதரவளிக்கிறோம். ஆனால், அது மட்டும் அரசாங்கம் அல்ல என்று சொன்னால் இவர்களுக்கு விளங்குவது இல்லை.

ஜனாதிபதி தேர்தல், இந்த உள்ளூராட்சி தேர்தல் ஆகியவற்றில் பெறுபேறு எப்படி இருந்தாலும், பாராளுமன்ற தேர்தலில், ஆளுகின்ற அநுர அரசுக்கு தெளிவான மக்கள் ஆணை கிடைத்தது. ஆகவே அவர்கள் தான் நாட்டை தொடர்ந்து ஆள போகிறார்கள். ஆளவும் வேண்டும். ஆனால், பிரச்னைகளுக்கு தீர்வு வேண்டும்-என்றார்.

(அ)

# பொலிஸ் உயர்பதவிகளில் திடீரென இடமாற்றங்கள்!

கொழும்பு, மே. 24

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதியுடன், நான்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் ஒரு பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இட மாற்றங்கள் வழங்கப்பட்டுள் ளன.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.எம்.எஸ். பண்டார, நலன்புரிப் பிரிவின் பணிப்பாளர் பதவியில் இருந்து குருநாகல் பிரிவின் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஜி.யூ.சி. ஹேரத், குருநாகல் பிரிவின் பொறுப்பதிகாரி பதவியில் இருந்து தலைமையக நிர்வாகப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி.கே. கால்லகே, மொனராகலை பிரிவில் இருந்து நலன்புரி பிரிவின் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.சி.யூ.ஐ. கந்தேவத்த, கேகாலை பிரிவில் இருந்து தம் புத்தேகம பிரிவின் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் அத்தியட்சகர் கே.டபிள்யூ.ஜி. துஷரசேன, பொலிஸ் தலைமையகத்தில் இருந்து மேல் மாகாண தெற்கு போக்குவரத்துப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(அ)

# அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பிரதமர் ஹரிணியுடன் சந்திப்பு

## பல விடயங்கள் குறித்து ஆராய்வு



கொழும்பு, மே 24

பிரதமர் ஹரிணி அமரசூரிய, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் வியாழக்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கு அமெரிக்க வெளிநாட்டு உதவிகளை வழங்குவதற்கான வழிமுறைகள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான நிலைபேறான ஒத்துழைப்புக்கு பங்களிக்கும் வழிகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அமெரிக்க திறைசேரித் திணைக்களத்தின் விரிவான மீளாய்வுக்காக காத்திருக்கும், வெளிநாட்டு உதவிகளுக்கு அண்மையில் மூன்று மாதங்களாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பது குறித்து பிரதமரிடம் பிரதிநிதிகள் குழு விளக்கியது.

முக்கிய அபிவிருத்தித் திட்டங்களில், குறிப்பாக பெண்களுக்கான பாதுகாப்பான வீட்டுவசதித் திட்டத்தில் ஏற்படும் தாக்கம் மற்றும் ஆதரவு பொறிமுறை சீர்குலைவதால் ஏற்படக்கூடிய பரந்த மனிதாபிமான பிரச்சினைகளுக்கான சாத்தியமான தீர்வுகள் குறித்து இந்த கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.

அபிவிருத்தியில் உலகளாவிய அளவில் அமெரிக்காவின் முக்கிய பங்கு மற்றும் இரு தரப்பு ஒத்துழைப்பைத் தொடர்வதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையின் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு, தொடர்ந்து ஆதரவை வழங்குவதற்கான மாற்று வழிகளை அடையாளம் காண அமெரிக்கா மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து பிரதமர் சிறப்பு கவனம் செலுத்தினார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதிலும், நாட்டின் நீண்டகால அபிவிருத்தித் திட்டத்தை ஆதரிப்பதிலும் அமெரிக்கா விதித்துள்ள வரிகளின் தாக்கம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் யு.எஸ். எய்ட் இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான செயற்றிட்ட பணிப்பாளரும் திட்ட அலுவலக பணிப்பாளருமான மௌரீன் ஹ்சியா, பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவு தொடர்பான அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் ஏஞ்சலினா ஹெர்மன், பொருளாதார அபிவிருத்தி அலுவலகத்தின் திட்ட முகாமைத்துவ நிபுணர் நிர்மி விதாரண, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த மற்றும் வெளியுறவு அமைச்சின் வட அமெரிக்கப் பிரிவின் பணிப்பாளர் பிரமுதித முனசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

(அ)

# வேகமாக பரவுகின்றது டெங்கு, சிக்குன்குனியா

கொழும்பு, மே. 24

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக, டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் பரவும் ஆபத்து அதிகரித்து வருவதாக சுகாதார தரப்பினர் எச்சரித்துள்ளனர்.

கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் இளம்பிள்ளைகள் நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா, மழையுடனான வானிலையால், ஆபத்தான நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

காய்ச்சல், கடுமையான மூட்டு வலி, சில சந்தர்ப்பங்க ளில் மூக்கில் கறுப்பு புள்ளிகள் தென்படல் போன்ற ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவ ஆலோ சனையைப் பெற வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

(அ)

# நீர்க் கட்டணம் திருத்தப்படாது

கொழும்பு, மே. 24

மின்சாரக் கட்டண திருத்தத்திற்கு இணையாக நீர் கட்டண திருத்தம் செய்யப்படாது என்று நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக போசிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மின்சாரக் கட்டணங்கள் திருத்தப்படுவது போலவே நீர்க் கட்டணங்களும் திருத்தப்படும் என்ற தகவல் கிடைத்துள்ளதாகக் கூறினார்.

இதற்கு பதிலளித்து பேசிய அமைச்சர், எந்த ஆதாரத்தின் அடிப்படையில் நீர்க் கட்டணத்தில் திருத்தம் செய்யப்படும் என்று கூறியதாக எதிர்க்கட்சித் தலைவரை நோக்கிய கேள்வியெழுப்பினார்.

(அ)

# தயாசிறியின் நடத்தை குறித்து விசாரிக்க மூவரடங்கிய குழு!

கொழும்பு, மே. 24

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் நடத்தைகள் குறித்து விசாரிக்க மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன நேற்றைய பாராளுமன்ற அமர்வில் தெரிவித்தார்.

தயாசிறி ஜயசேகரவின் பாராளுமன்ற நடத்தை தொடர்பாக சபாநாயகருக்குக்கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த விசாரணைக் குழு நியமிக்கப் பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தயாசிறி ஜயசேகர நடந்து கொண்ட விதம் தொடர்பிலேயே இந்த முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த குழுவில், அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் எதிர்க் கட்சியின் பிரதான அமைப்பா ளர் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க ஆகியோர் உள்ளடங்குகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் எங்கள் ஆட்சி உறுதியானது!

### அறிவித்தார் அமைச்சர் லால்காந்த

கொழும்பு, மே. 24

கொழும்பு மாநகரசபையில் நாம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டோம். இது தொடர்பில் அதிகாரப்பூர்வ அறிவிப்பை மாத்திரமே வெளியிடவேண்டியுள்ளது." - என்று அமைச்சர் லால்காந்த தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபையில் எதிரணியே ஆட்சியமைக்கும் எனக் கூறப்பட்டுவரும் நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

"கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மை பலத்தை உறுதிப்படுத்திவிட்டோம். அதிகாரப்பூர்வமற்ற வகையில் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. அதனை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டிய வேலை மட்டும்தான் உள்ளது. எமது மேயரும் பதவியேற்ற தயாராக உள்ளார்." - எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)



## கொழும்பில் என்.பி.பி. ஆட்சி பிரபா கணேசன் நேசக்கரம்!



கொழும்பு, மே. 24

பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக தேசிய கூட்டணி தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாக செயற்குழுக் கூட்டத்தில் ஏகமானதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை ஆறு மணிக்கு ஜனநாயக தேசிய கூட்டணியின் செயற்குழு கூட்டம் அதன் தலைவர் பிரபா கணேசன் தலைமையில் பம்பலபிட்டி தலைமை காரியாலயத்தில் இடம் பெற்றது.

இதன்போது கொழும்பு மாநகர சபையில் ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாக ஏகமானதாக தீர்மானிக்கப்பட்டது.

ஜனநாயக தேசிய கூட்டணிக்கு கொழும்பு மாநகர சபை உட்பட கிடைக்கப்பெற்ற பத்து ஆசனங்கள் மக்களின் அபிவிருத்திக்காகவே பயன்படுத்தப்படும் என்றும் அரசாங்கம் மக்கள் விரோத செயல்பாடுகளை முன்னெடுத்தால் ஆதரவினை வாபஸ் வாங்க தயங்கமாட்டோம் என ஜனநாயக தேசிய கூட்டணி தலைவர் பிரபா கணேசன் தெரிவித்தார். (அ)

## போரால் உயிரிழந்தவர்களை நினைவு கூருவது தவறில்லை!

### அமைச்சர் கிரிஷாந்த அபேசேன



கொழும்பு, மே. 24

"போரால் வடக்கில் உயிரிழந்தவர்களையும் நினைவுகூர வேண்டும். அவர்களும் இலங்கையர்கள்தான். இவ்வாறு நினைவுகூருவதில் எவ்வித தவறும் கிடையாது" - என்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

"எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இராணுவத்தினரைப் பற்றி பேசுகின்றார், புலிகள் அமைப்புக்கு ஆயுதம் வழங்கியது யார்? எனவே, இராணுவம் பற்றி கதைப்பதற்கு சஜித்துக்கு தார்மீக உரிமை உள்ளதா?" - எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-படையினர் நினைவுநாள் நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்றார். அங்கு அவர் ஒரு வசனம் கூட இனவாதம் பேசவில்லை. இதுதான் எமது கொள்கை. நீதி, நியாயம் மற்றும் நேர்மைக்காக குரல் எழுப்பிய தெற்கு மற்றும் வடக்கு இளைஞர்களும் வீரர்கள்தான். தெற்கில் இளைஞர்கள் சாகும்போது மட்டும் அல்ல வடக்கில் இளைஞர்கள் சாகும்போதும் எமக்கு கண்ணீர் வந்தது.

அதேபோல போர் காரணமாக பலர் உயிரிழந்தனர். அவர்களை நாம் நினைவுகூரக் கூடாதா? அவ்வாறு நினைவுகூர வேண்டும். இங்கும் நினைவு கூர முடியும். வடக்கிலும் இளைஞர்களும் உயிரிழந்துள்ளனர். அவர்களையும் நினைவுகூர வேண்டும். அதில் எவ்வித தவறு கிடையாது.

அவர்களும் இலங்கையர்கள்தான். ஏதேனும் காரணத்துக்காக போர் ஏற்பட்டிருக்கலாம். இரு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. காணாமல்போன சம்பவங்கள் இடம்பெற்றன. ஆக நினைவுகூருவதில் என்ன தவறு உள்ளது? தேசிய மக்கள் சக்தியென்பது இனவாதக் கட்சி கிடையாது. எமது இதயங்களில் இனவாதம் இல்லை.

வடக்கு, கிழக்கில் பலவந்தமாக குடியேற்றங்களை ஏற்படுத்தியது யார்? யாழ். நூலகத்தை எரித்தது யார்? 83 கலவரத்தை ஏற்படுத்தியது யார்? ஆனால் சில கட்சிகள் அவர்களுக்கு சோரம்போவது கவலையளிக்கின்றது.

வடக்குக்கும், தெற்குக்கும் ஒரே சட்டம், சலுகைதான் இருக்க வேண்டும்-என்றார். (அ)

# இரு அரச வங்கி அறிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிப்பு!



கொழும்பு, மே. 24

இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சரான அநுர குமார திசாநாயக்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

இலங்கை வங்கியின் தலைவர் காவிந்த டி சொய்சா மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் கலாநிதி ஹர்ஷ் கப்ரால் ஆகியோரால் ஜனாதிபதியிடம் இந்த அறிக்கைகள் கையளிக்கப்பட்டன.

இலங்கையின் நிதி நிறுவனம் அல்லது வங்கியொன்று பெற்றுக்கொண்ட அதிகமான இலாபமாக இலங்கை வங்கி 106 பில்லியன்களை இலபமாக ஈட்டியுள்ளதென இலங்கை வங்கியின்தலைவர்காவிந்த டி சொய்சா இதன்போது தெரிவித்தார். இந்த இலாபம் வரி அறிவிப்புக்கு முன் பெற்றுக்கொண்டதென சுட்டிக்காட்டிய தலைவர், வர்த்தக அபிவிருத்தி, சிறு மற்றும் மத்தியத்தர தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் நிதி நிறுவனங்கள் வரிசையில் இலங்கை வங்கி முதன்மை நிலையில் இருப்பதாகவும் கூறினார்.

இதன்போது கருத்து தெரிவித்த, தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் கலாநிதி ஹர்ஷ கப்ரால், 2023 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கி பெற்றுக் கொண்ட 4.2 பில்லியன் இலாபத்தை 2024 ஆம் ஆண்டில் 26.4 பில்லியன்களாக அதிகரித்துக்கொள்ள முடிந்துள்ளதாக தெரிவித்தார்.

தேசிய சேமிப்பு வங்கி இந்த வெற்றியை அடைந்துகொள்வதற்கு நாட்டில் காணப்படும் பொருளாதார ஸ்திரத்தன்மையும், நிதி ஒழுக்கமுமே காரணமாக அமைந்ததென சுட்டிக்காட்டிய ஹர்ஷ கப்ரால், அரச நிறுவனங்கள் அரசாங்கத்திற்கும் திறைசேரிக்கும் பாரமாக இல்லாமல் முறையான முகாமைத்துவத்தின் கீழ் இலாபத்தை ஈட்டும் நிலைக்கு மாற முடியும் என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும் என்றும் தெரிவித்தார். 2025 ஆம் ஆண்டிலும் இதனை மிஞ்சிய வெற்றியை அடைந்துகொள்ள தேசிய சேமிப்பு வங்கி எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

இரு அரச வங்கிகள் என்ற வகையில் இலங்கை வங்கியும் தேசிய சேமிப்பு வங்கியும் குறுகிய காலத்தில் பெற்றுக்கொண்டிருக்கும் இந்த வெற்றியை பாராட்டிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, மூலோபாய தலைமைத்துவம், அர்ப்பணிப்பு மற்றும் முறையான முகாமைத்துவத்தின் மூலம் அரச நிறுவனங்களை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னேற்றகரமாக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும், இந்த வங்கிகள் அடைந்திருக்கும் முன்னேற்றம் அதனை நன்றாக பிரதிபலிக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

2025 ஆம் ஆண்டில் தங்களது டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நுகர்வோர் சேவைகளை பலப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தலைவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர். (அ)

# தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி குறித்த விசாரணை ரி.ஐ.டியிடம்!

கொழும்பு, மே. 24

வெள்ளவத்தையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 துப்பாக்கி தொடர்பான விசாரணைகள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவிடம் (ரி.ஐ.டி.) ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பொலிஸ் செய்தித் தொடர்பாளர் எஸ்.எஸ்.பி புத்திக மனதுங்க இதனை அறிவித்தார்.

கொழும்பில் உள்ள ஹவ்லொக் சிற்றி வீட்டுத் தொகுதியின் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கி தொடர்பாக 40 கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## சமிந்த விஜயசிறி இராஜினாமா

கொழும்பு, மே. 24

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி, தான் வகித்த பண்டாரவளை தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து விலகுவதற்கு முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பான கடிதத்தை நேற்றுக் காலை, கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ விடம்,

பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து அவர் கையளித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்த சமிந்த விஜயசிறி, 2023ஆம் ஆண்டு தமது எம்.பி பதவியையும் இராஜினாமா செய்திருந்ததுடன்,

மீண்டும் 2024ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்த லில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவான சீர்திருத்தங்களை எதிர்பார்க்கும் நாணய நிதியம்

## தொடர்புத்துறை பணிப்பாளர் தகவல்

கொழும்பு, மே. 24

**இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நான்காவது மதிப்பாய்வில் எட்டப்பட்ட ஊழியர்கள் அளவிலான ஒப்பந்தத்தை அதன் நிர்வாகக் குழு அங்கீகரிக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.**



இருப்பினும், இந்த ஒப்புதல் இலங்கை முக்கிய சீர்திருத்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தது என்று சர்வதேச நாணய நிதிய தொடர்புத் துறையின் பணிப்பாளர் ஜூலி கோசாக் குறிப்பிட்டார்.

நாணய நிதியத்தின் வாராந்திர ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் மேலும் உரையாற்றி அவர்-ஏப்ரல் 25 ஆம் திகதி நாணய நிதியத்தின் ஊழியர்களும் இலங்கை அதிகாரிகளும் இலங்கையின் திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வு குறித்த பணியாளர் நிலை ஒப்பந்தத்தை எட்டினர்.

மேலும், இந்த மதிப்பாய்வு எங்கள் நிர்வாக வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டவுடன், இலங்கைக்கு சுமார் 344 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கும்.

மதிப்பாய்வை முடிப்பது நிர்வாக வாரியத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

மேலும், அந்த வாரியக் கூட்டம் வரும் வாரங்களில் நடைபெறும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

வாரியக் கூட்டத்தின் துல்லியமான நேரம் இரண்டு விடயங்களைப் பொறுத்தது.

முதலாவது முந்தைய நடவடிக்கைகளை செயல்படுத்துதல்-முக்கிய முந்தைய நடவடிக்கைகள் மின்சார செலவுகளை மீட்டெடுப்பது, செலவு மீட்பு விலை நிர்ணயம் மற்றும் தானியங்கி மின்சார விலை சரிசெய்தல் பொறிமுறையின் சரியான செயல்பாட்டை உறுதி செய்தல் தொடர்பானவை.

இரண்டாவது தற்செயல் நிதி உத்தரவாத மதிப்பாய்வை நிறைவு செய்வதாகும் இது பலதரப்பு கூட்டாளிகள், இலங்கைக்கு உறுதியளித்த நிதி பங்களிப்புகளை உறுதிப்படுத்துவதிலும், கடன் மறுசீரமைப்பில் போதுமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதிலும் கவனம் செலுத்தும்.

எனவே, சுருக்கமாக, மதிப்பாய்வை நிறைவு செய்வது நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

வாரியக் கூட்டம் வரும் வாரங்களில் நடைபெறும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் -என்றார். (அ)

# பதில் கணக்காய்வாளர் நாயகத்தின் சேவை நீடிப்பு!

கொழும்பு, மே 24

பதில் கணக்காய்வாளர் நாயகமாக பணியாற்றி வரும் ஜி.எச்.டி. தர்மபாலவுக்கு ஆறு மாத காலம் சேவை நீட்டிப்பு வழங்குவதற்கு அரசியலமைப்புச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று முன் தினம் பிற்பகல் கூடிய அரசியலமைப்புச் சபை, ஜனாதிபதியின் முன்மொழிவுக்கு இவ்வாறு அனுமதி வழங்கியுள்ளது.

முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் ஓய்வு பெற்றதை அடுத்து, அந்தப் பதவி தற் போது 44 நாட்களாக வெற்றி டமாக உள்ள நிலையில் புதிய கணக்காய்வாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்மொழிந்த பெயருக்கு அரசியலமைப் புச்சபை அனுமதி வழங்கவில்லை.

இதன்படி, பதில் கணக்காய்வாளர் நாயகமாக பணியாற்றி வரும் ஜி.எச்.டி. தர்மபாலவுக்கு ஆறு மாத சேவை நீட்டிப்பு வழங்குவதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் அரசியலமைப்புச் சபையிடம் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு இவ்வாறு அனுமதி கிடைத்துள்ளது.

# முன்னாள் அமைச்சர்கள் 12 பேரின் வங்கிக் கணக்குகள் பரிசோதனை!

கொழும்பு, மே. 24

ஜனாதிபதி நிதிய மோசடி குற்றச்சாட்டின் பேரில், கெஹெலிய ரம்புக்வெல, ராஜித சேனாரத்ன, தயாசிறி ஜயசேகர ஆகிய முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட 12 பேரின் வங்கிக் கணக்குகளை பரிசோதிப்பதற்கு நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

போலியான தகவல்களை சமர்ப்பித்து ஜனாதிபதி நிதியத்தில் அங்கீகரித்த உயர்ந்தபட்ச தொகையையும் விட கூடுதலான தொகையைப் பெற்று மோசடி செய்துள்ளதாக குறித்த 12 பேரின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதன்படி, இதுகுறித்த விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கொழும்பு நீதவான் நீதிமன்றம் அரச வங்கிகளுக்கு கட்டளையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுயேச்சைக் குழுக்களை ஏளனப்படுத்திய அரசு இன்று அவற்றின் காலில் விழுகிறது!

## லசந்த அழகியவண்ண குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 24

எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணியாக நாம் எமது ஒத்துழைப்பை வழங்குவோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.



அன்று இந்த அரசாங்கம் சுயேச்சைக் குழுக்களை ஏளனப்படுத்தியமையை முழு நாடும் அறியும். அதே அரசாங்கம் தான் இன்று அவற்றின் கால்களில் விழுந்துள்ளது எனவும் அவர் கூறினார்.

சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட சந்திப்பொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஏனைய கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகள் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக பொதுஜன பெரமுன வுடன் பிரத்தியேகமாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இது குறித்த பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்கின்றமை மகிழ்ச்சியளிக்கிறது.

அரசாங்கத்துக்கு வாக்களித்ததைப் போன்றே, எதிர்க் கட்சிகளுக்கும் மக்கள் வாக்களித்திருக்கின்றனர். எனவே மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எமக்கிருக்கிறது.

பொதுஜன பெரமுன மற்றும் சுதந்திர கட்சிக்கு மாத்திரம் சுமார் 1200 உறுப்பினர்கள் உள்ளனர்.

அதற்கமைய சுமார் 125 சபைகளில் எதிர்க்கட்சிகளால் ஆட்சியமைக்க முடியும்.

அன்று இந்த அரசாங்கம் சுயேட்சை குழுக்களை ஏளனப் படுத்தியமையை முழு நாடும் அறியும். அதே அரசாங்கம் தான் இன்று அவற்றின் கால்களில் விழுந்துள்ளது- என்றார். (அ)

# உப்பு இறக்குமதி மேலும் தாமதம்!

கொழும்பு, மே. 24

இறக்குமதி செய்யப்பட்ட உப்பு நாட்டை வந்தடைவதற்கு இன்னும் சில நாட்கள் தாமதம் ஏற்படக்கூடும் என தேசிய உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலவும் பாதகமான வானிலை காரணமாக இத் தாமதம் ஏற்பட்டுள்ளதாக உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போதைய உப்பு பற்றாக் குறைக்கு தீர்வாக, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உப்பு கப்பல் நேற்று முன் தினம் இரவு நாட்டுக்கு வரவிருந்தது.

இந்தநிலையில் தனியார் துறையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 250 மெற்றிக் தொன் உப்பு மற்றும் தேசிய உப்பு நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட 2,800 மெற்றிக் தொன் உப்பு என மொத்தம் 3,050 மெற்றிக் தொன் உப்பு நாட்டுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டது.

இருப்பினும், சீற்ற வானிலை காரணமாக சில நாட்களுக்கு தாமதமாகலாம் எனவும், அதன் பின்னர் நாட்டுக்கு உப்பு தொடர்ந்து கொண்டுவரப்படும் எனவும் தேசிய உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# புதையல் அகழ்வில் ஈடுபட்ட 6பேர் கைது!

கொழும்பு, மே. 24

வனாத்தவில்லு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டாரநாயக்கபுர பகுதியில், புதையல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண் டிருந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வனாத்தவில்லு பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவிற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், வனாத்த வில்லு, கண்டி மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 25 முதல் 65 வயதுக்குட்பட்டவர் கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. (அ)

# கட்டுநாயக்கவில் குஷ்; ஐந்து பயணிகள் கைது!

கொழும்பு, மே. 24

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 7.15 கிலோ குஷ் கஞ்சாவுடன் ஐந்து பயணிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நபர்கள் தாய்லாந்தின் பாங்காக்கில் இருந்து வருகை தந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கொழும்பு 15, கொழும்பு 02 மற்றும் தெமட்டகொடை ஆகிய இடங்களில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகிறது. (அ)

# போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் 8 பேர் கைது!

கொழும்பு, மே. 24

சிலாபம், தொடுவாவ பகுதியில் போதைப்பொருள் கடத்தல் விற்பனை செய்ததாக சந்தேகத்தின் பேரில் 8 நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும், போதைப்பொருள் வர்த்தகம் மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 18 மில்லியன் ரூபா ரொக்கப் பணமும் இவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பொலனறுவை வைத்தியசாலையில் உயிரை மாய்த்துக்கொண்ட நோயாளி!

கொழும்பு, மே. 24

பொலனறுவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளியொருவர் கூர்மையான ஆயுதத்தால் தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 18ஆம் திகதி மாத்தளையில் இருந்து வந்த 55 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான இவர், மூச்சுத்திணறல் மற்றும் சிறுநீரக நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்ததாகத் தெரிவிக் கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன் தினம் பிற்பகல், தன்னிடம் இருந்த சிறிய கத்தியால் தனது மார்பு பகுதியில் காயப்படுத்தி அவர் தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் எனத் தெரிவிக் கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொலிஸ் நிலையத்தில் குழப்பம் சுமண ரத்ன தேரர் நேற்று கைது

மட்டக்களப்பு, மே 24

**மட்டக்களப்பு மங்களராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் நேற்றுக்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

அம்பாறை உஹன பொலிஸ் நிலையத்தில் குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட சம்பவத்தையடுத்து இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உஹன பொலிஸாரால் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டபோது, அவருடன் இருந்த இரு பிள்ளைகளை பாதுகாப்பற்ற முறையில் ஓட்டோவில் அழைத்துச் செல்ல முயன்றதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தேரர் அந்த பொலிஸ் நிலையத்தில் குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டதாக தெரிவிக்கப்படும் காணொலியொன்றும் சமூக வலைத்தளத்தில் வெளியாகியிருந்தது. (எ)



# கல்முனை சந்தைப் பகுதியில் திடீர் சோதனை முன்னெடுப்பு

கல்முனை, மே 24

பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்புமிக்க உணவைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கல்முனை பிராந்தியத்தில் உள்ள வியாபார நிலையங்கள், உணவகங்களில் திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


அந்த வகையில் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைவாக கல்முனை பொதுச் சந்தைப் பகுதிகளில் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லாபீர் தலையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த உருளைக் கிழங்கு உட்பட உணவுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயல்பட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு திருத்த வழிமுறைகளுக்கு அமைவாக ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (எ)

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொற்றா நோய் பரிசோதனை

கல்முனை, மே 24



அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொற்றா நோய் பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி குழுவினரால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டல்களுக்கமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம்.எம். நௌசாத் தலைமையில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாரின் போசாக்கு அளவிடப்பட்டு உடற் திணிவுச் சுட்டெண் கணிப்பு, குருதி அழுத்தம், இரத்த சீனி அளவு, இடுப்புச் சுற்றளவு, உயரத்திற்கேற்ற நிறையின் அவசியம் தொடர்பான கருத்தாடல்களுடன் உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச்சுகாதார பரிசோதகர், சுகாதார ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# “வனத்துறையினரின் அத்துமீறல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்”

கொழும்பு, மே 24

வனத்துறையினரின் அத்துமீறல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் சம்பூர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 40 விவசாயிகளுக்கு சொந்தமான 250 ஏக்கர் நிலத்தையும் கிளிவெட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவில் 37 விவசாயிகளுக்கு சொந்தமான 85 ஏக்கர் நிலத்தையும் பாரதிபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 45 விவசாயிகளுக்கு சொந்தமான 117 ஏக்கர் நிலத்தையும் ஆசாத் நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 70 விவசாயிகளுக்குச் சொந்தமான 148 ஏக்கர் நிலத்தையும் தோப்பூர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 60 விவசாயிகளுக்குச் சொந்தமான 93 ஏக்கர் நிலத்தையுமென மொத்தம் 252 விவசாயிகளுக்கு சொந்தமான 693 ஏக்கர் நிலத்தை வனத்துறை தனது எல்லைக் கற்களை இட்டு பிடித்து வருவதோடு விவசாயிகளை விவசாயம் செய்ய விடாமல் தடுத்தும் வருகின்றது.

இதைப் போலவே சேருவில பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் தங்கநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் 85 விவசாயிகளுக்கு சொந்தமான 145 ஏக்கர் நிலத்தை எல்லைக் கற்களை போட்டு பிடித்துள்ளது.

வனத்துறையின் இந்த செயல்பாட்டை உடன் நிறுத்த ஆவன செய்யுமாறு துறைசார் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருகோணமலை மாவட்டத்தில் நில அபகரிப்பு என்பது இப்பொழுது தோன்றிய பிரச்னை அல்ல. 1983 ஆண்டு தொடக்கம் 2009 ஆண்டு வரை போர் நிலவிய காலத்தில் மக்கள் இடம் பெயர்ந்தனர்.

அவ்வேளையில் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்துவந்த நிலங்களை வனத்துறையும், வனவிலங்குத் துறையும் எல்லைக் கற்களை போட்டு பிடித்து வைத்துள்ளன.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போர் காலத்திலே கைவிடப்பட்ட 205 சிறுகுளங்களையும் 25 அணைக் கட்டுகளையும் கொண்டமைந்த அண்ணளவாக 12000 ஏக்கர் நிலத்தை வனத்துறை எல்லைக் கற்களை போட்டு பிடித்து வைத்துள்ளது . இதன் மூலம் 24,000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி இல்லாமல் போயுள்ளது”- என்றார். (எ)





# துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான காணியில் சட்டவிரோதமாக விவசாயம்

## திருகோணமலை முத்துநகரில் பெரும் பரபரப்பு

திருகோணமலை, மே 24

திருகோணமலை - முத்துநகர் பகுதியில் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமாக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த 25 பேரை வெளியேற்றும் நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை உப்புவெளி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட முத்துநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள தகரவெட்டுவான் விவசாய சம்மேளனத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த விவசாயிகள் 25 பேரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை திருகோணமலை நீதிவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைய நீதிமன்ற பதிவாளரால் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகார சபையால் இந்த விவசாயிகளுக்கு எதிராக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் இந்த விவசாயிகள் நேற்று முன்தினம் வெளியேற்றப்பட்டனர்.

இந்த நிலையில், குறித்த இடத்துக்கு துறைமுக அதிகார சபை உத்தியோகத்தர்களுடன் அப்பகுதியில் சோலார் திட்டத்தை மேற்கொள்ளவுள்ள நிறுவனத்தின் பிரதிநிதிகளும் பிரசன்னமாகியிருந்தனர்.

அத்துடன் பாதுகாப்பு நடவடிக்கைக்காக விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் மற்றும் துறைமுக அதிகார சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

அப்பகுதியில் 1980ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே தாம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைச்சரவையின் அனுமதியின்றி இக்காணிகள் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விவசாயிகள் கூறுகையில், கடந்த சில வருடங்களுக்கு முன் குறித்த காணிகளை இந்திய சோலார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியுள்ளனர். இதனால் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் எம்மை வெளியேற்றி அக்காணிகளை சோலார் திட்டத்துக்காக வழங்கவுள்ளனர்.

இது தொடர்பில் தற்போதைய அரசாங்கத்திடம் முறையிட்டும் எவ்வித ஆக்கபூர்வமான பதிலும் எமக்கு வழங்கப்படவில்லை. அத்துடன் நீதிமன்ற நடவடிக்கைக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் எனவும் துறைமுக அதிகார சபைக்கு உத்தியோகபூர்வமான முறையில் குறித்த காணிகள் கையளிக்கப்பட்ட பின்னர் அவற்றை மக்களுக்கு பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதி ஒருவர் கூறினார். இதன் அடிப்படையில் நாம் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லை எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர கூறுகையில்,

நீதிமன்ற நடவடிக்கைக்கு நாம் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடாது. குறித்த காணிகள் அளக்கப்பட்டு துறைமுக அதிகார சபையிடம் கையளிக்கப்படுமேயன்றி சோலார் நிறுவனத்துக்கு கையளிக்கப்படமாட்டாது. அவர்கள் அப்பகுதிக்கு செல்லமாட்டார்கள். அத்துடன் அவர்களுக்கு இந்தக் காணிகளை வழங்குவதா? அல்லது இதற்குப் பதிலாக வேறு காணிகளை வழங்குவதா? என்பது தொடர்பில் பின்னர் முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (எ)

# குன்றும் குழியுமாக காணப்படும் வீதியைப் புனரமைப்பது யார்?

கல்முனை, மே 24

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பெரிய நீலாவணை முதல் நிந்தவூர் வரையிலான பொதுமக்கள் கரையோர வீதியை அன்றாடம் பயன்படுத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இக்கரையோர பாதையானது பாண்டிருப்பு எல்லை வீதி கரையோர வீதியுடன் இணையும் பகுதியிலிருந்து குன்றும் குழியுமாக காணப்படுகின்றது

இதனால் இவ்வீதியால் பயணம் மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்தனர்.

இது தவிர இவ்வீதி ஊடாக அன்றாடம் அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பயணம் செய்வதை காணக்கூடியதாக உள்ளது.



மழை காலங்களில் இவ்வீதி சேறும் சகதியுமாக காணப்படுவதனால் இவ்வீதியால் பயணிக்கின்ற மீனவர்கள் பல்வேறு விபத்துகளுக்கு முகம் கொடுப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அணு ஆயுத ஏவுகணை ஏவி அமெரிக்கா சோதனை



வாஷிங்டன், மே 24

அணு ஆயுத ஏவுகணையை ஏவி அமெரிக்கா சோதனை செய்துள்ளது.

அதி நவீன ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈடுபட்டு வருகிறார். இந்த நிலையில் அமெரிக்கா சக்தி வாய்ந்த அணு ஆயுத ஏவுகணையை ஏவி சோதனை மேற்கொண்டுள்ளது. அணு சக்தி திறன் கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் மினிட்மேன் 111 என்ற ஏவுகணையை அமெரிக்கா ஏவியது. கலிபோர்னியாவில் உள்ள வாண்டன்பெர்க் விண்வெளிப் படைத் தளத்திலிருந்து மார்ஷல் தீவுக்கு இந்த ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட்டது.

மணிக்கு 15 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் சென்ற இந்த ஏவுகணை 4, 200 கிலோ மீற்றர் தூரத்துக்கு சென்றது. இந்த ஏவுகணை சோதனை வழக்கமானதுதான் என்றும் தற்போதைய உலக நிகழ்வுகளுக்கு எதிர்வினை அல்ல என்றும் அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# பயங்கரவாத நடவடிக்கைக்கு அமெரிக்காவில் இடமில்லை!

## ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு



வாஷிங்டன், மே 24

“யூத எதிர்ப்பு பயங்கரவாதம் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும். வெறுப்புக்கும் பயங்கரவாதத்துக்கும் அமெரிக்காவில் இடமில்லை”- இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்.

அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் அமைந்துள்ள இஸ்ரேல் தூதரகத்தில் யூத அருங்காட்சியகத்துக்கு அருகே இடம்பெற்ற தாக்குதலில் இஸ்ரேல் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பலஸ்தீன ஆதரவு நபர் இந்தத் தாக்குதலை நடத்தியதாக கூறப்படும் நிலையில் ட்ரம்ப் இந்தச் சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது,

“யூத எதிர்ப்பு பயங்கரவாதம் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும். வெறுப்புக்கும் பயங்கரவாதத்துக்கும் அமெரிக்காவில் இடமில்லை. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவது மிகவும் வேதனை அளிக்கிறது”- இவ்வாறு ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ரஷ்ய அதிகாரிகளுடன் கனிமொழி குழு சந்திப்பு



மொஸ்கோ, மே 24

ரஷ்ய வெளிவிவகாரத்துறை அதிகாரிகளுடன் தி.மு.க. எம்.பி. கனிமொழி தலைமையிலான குழுவினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, பயங்கரவாதிகளுக்கு எதிராக இந்தியா நடத்திய ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கை மற்றும் இந்தியா - பாகிஸ்தான் இடையே நான்கு நாட்கள் நீடித்த சண்டை ஆகியவை குறித்து விளக்குவதற்காக உலகில் உள்ள 33 நாடுகளுக்கு அனைத்துக்கட்சி எம்.பிக்கள் அடங்கிய குழுவை அனுப்ப மத்திய அரசு முடிவு செய்தது.

இதற்காக 7 குழுக்கள் அமைக்கப்பட்டன. இதில் ஐக்கிய ஜனதா தள எம்.பி. சஞ்சய் ஜா தலைமையிலான குழுவினர் ஜப்பான் சென்றனர். சிவசேனா எம்.பி. சிறீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழுவினர் ஐக்கிய அமீரகத்துக்கு சென்றனர். இதே போன்று தி.மு.க. எம்.பி. கனிமொழி தலைமையிலான அனைத்துக்கட்சி எம்.பிக்கள் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் புதுடில்லியிலிருந்து ரஷ்யா சென்றனர்.

இந்தக் குழுவினர் சுலோவேக்கியா, கிரீஸ், லட்வியா மற்றும் ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று அந்த நாட்டுத் தலைவர்களிடம் ஒப்ரேஷன் சிந்தூர், பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவு உள்ளிட்டவை குறித்து விளக்கிக் கூறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# நாங்கள் பல்லாயிரக்கணக்கான பயங்கரவாதிகளை ஒழித்தோம்

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு



ஜெருசலேம், மே 24

நாங்கள் பல்லாயிரக்கணக்கான பயங்கரவாதிகளை ஒழித்தோம். டெய்ப் ஹனியே, யஹ்யா சின்வார் ஆகியோரையும் ஒழித்தோம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்தின் காஸாவை ஆளும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே நீடித்து வரும் சண்டை இன்னும் முடிவுக்கு வரவில்லை. கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் தெற்கு காஸாவில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வார் கொல்லப்பட்டார். இதையடுத்து அவரது சகோதரர் முகமது சின்வார் காஸா பகுதி ஹமாஸ் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அவரும் தற்போது கொல்லப்பட்டிருக்கலாம் என நெதன்யாகு தெரிவித்தார். ஜெருசலேமில் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாங்கள் பல்லாயிரக்கணக்கான பயங்கரவாதிகளை ஒழித்தோம். டெய்ப் ஹனியே, யஹ்யா சின்வார் ஆகியோரை ஒழித்தோம். இஸ்ரேல் நடத்திய வான்வெளித் தாக்குதலில் ஹமாஸ் தலைவர் முகமது சின்வாரும் அனேகமாக கொல்லப்பட்டிருக்கலாம். எங்கள் படைகள் காஸாவில் பல பகுதிகளை கைப்பற்றி வருகின்றன. இந்த நடவடிக்கையின் முடிவில் அந்தப் பகுதிகள் அனைத்தும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் - என்றார். ஹமாஸ் தலைவர் முகமது சின்வார் கொல்லப்பட்டிருக்கலாம் என நெதன்யாகு கூறியிருந்தாலும் ஹமாஸ் தரப்பு இதனை உறுதி செய்யவில்லை. (எ)

# காஸாவில் இராஜதந்திரிகளை நோக்கி இஸ்ரேல் படையினர் துப்பாக்கிச்சூடு

காஸா, மே 24

காஸாவில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரையில் இராஜதந்திரிகள் குழுவினரை நோக்கி இஸ்ரேலிய படையினர் எச்சரிக்கை வேட்டுக்களை தீர்த்தமைக்கு பல உலக நாடுகள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

ஜெனின் நகரை நோக்கி சென்று கொண்டிருந்த இராஜதந்திரிகளை நோக்கி இஸ்ரேலிய படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

இஸ்ரேலிய படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபடுவதை காண்பிக்கும் வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

அனுமதியளிக்கப்பட்ட பகுதியிலிருந்து இராஜதந்திரிகள் விலகியதன் காரணமாகவே துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. அவர்களை எச்சரிக்கும் விதத்தில் வானை நோக்கியே துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும் விளக்கமளித்துள்ளது.

சர்வதேச இராஜதந்திரிகளுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு வருந்துவதாக தெரிவித்துள்ள இஸ்ரேலிய இராணுவம், விசாரணைகளின் பின்னர் இராஜதந்திரிகளை தொடர்பு கொள்ளவுள்ளதாகவும் கூறியுள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைக்கு ஸ்பெயின், எகிப்து, பிரான்ஸ், அயர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன. (எ)

# 650 ஆண்டுகள் பழமையான கோபுரம் இடிந்து விழுந்தது



பீஜிங், மே 24

சீனாவில் 650 ஆண்டுகள் பழமையான கோபுரம் இடிந்து விழுந்தது.

சீனாவின் அன்ஹுயி மாகாணத்தில் பல்வேறு சுற்றுலாத் தலங்கள் அமைந்துள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று பெங்யாங் கோபுரமாகும். 650 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த கோபுரத்தைக் காண தினமும் நூற்றுக்கணக்கானோர் வந்து செல்கின்றனர்.

ஏராளமானோர் அங்கு சுற்றுலா சென்றிருந்த நிலையில் திடீரென அதன் மேற்கூரை சரியத் தொடங்கியது. இதனைப் பார்த்த பொதுமக்கள் அங்கிருந்து அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். சற்றுநேரத்தில் அந்தக் கோபுரத்தின் மேற்கூரை முழுவதும் இடிந்து தரைமட்டமானது.

அதிர்ஷ்டவசமாக சுற்றுலாப் பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்த பெங்யாங் கோபுரம் கடந்த 1995ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் தற்போது மேற்கூரை இடிந்து விழுந்ததால் உள்ளூர் நிர்வாகம் இதுகுறித்து விசாரணை நடத்தி வருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத் அணியை வீழ்த்தி லக்னோ ஆறுதல் வெற்றி

அகமதாபாத், மே 24

குஜராத் அணியை வீழ்த்தி லக்னோ அணி ஆறுதல் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 64ஆவது லீக் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணிக்கு மார்க்ரம் மற்றும் மார்ஷ் தொடக்கம் கொடுத்தனர். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்த லக்னோ அணி 235 ஓட்டங்கள் குவித்தது. நிக்கோலஸ் பூரன் 56 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இதனையடுத்து 236 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி குஜராத் அணி களமிறங்கியது. ஆரம்ப வீரர்கள் சாய் சுதர்சன் (21 ஓட்டங்கள்), சுப்மன் கில் (35), ஜோஸ் பட்லர் ( 33ஓட்டங்கள்) என சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 4ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய ஷாருக்கான் அதிரடி காட்டினார்.

இதனால், ஒரு கட்டத்தில் குஜராத் அணிக்கு சாதகமாக ஆட்டத்தின் போக்கு மாறுவது போல இருந்தது. எனினும், மறுமுனையில் அடுத்தடுத்து விக்கெட்கள் விழுந்தன. இதனால், ஓட்ட எண்ணிக்கை விகிதம் எகிறத் தொடங்கியது. குஜராத் அணிக்கு நம்பிக்கை கொடுத்து



வந்த ஷாருக்கானும் 57 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால், குஜராத் அணியின் வெற்றி கனவு தகர்ந்தது. 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 202 ஓட்டங்கள் மட்டுமே குஜராத் அணி எடுத்தது. இதன் மூலம் 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லக்னோ அணி வெற்றி பெற்றது. பிளேஒவ் சுற்றிலிருந்து வெளியேறியுள்ள லக்னோ அணிக்கு ஆறுதல் வெற்றி கிடைத்தது.

13 போட்டிகளில் விளையாடியுள்ள குஜராத் அணி 18 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. (எ)

# "நாம் பவர்பிளே ஓவர்களில் சிறப்பாக செயல்பட்டோம்"

அகமதாபாத், மே 24

நாங்கள் பவர்பிளே ஓவர்களில் நன்றாக பந்து வீசினோம். ஆனால் விக்கெட்களை எடுக்கவில்லை. இதனால் தோல்வியடைந்தோம் என்று குஜராத் அணித் தலைவர் சுப்மன் கில் தெரிவித்தார்.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் குஜராத் - லக்னோ அணிகள் மோதின. இதில் லக்னோ அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் தோல்வி கண்ட பின்னர் சுப்மன் கில் அளித்த பேட்டியில் கூறியதாவது, நாங்கள் கூடுதலாக 15 - 20 ஓட்டங்கள் கொடுத்துவிட்டோம். லக்னோவை நாங்கள் 210 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்த முயற்சித்தோம். 210 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்துவதற்கும் 230 ஓட்டங்கள் கொடுத்து கட்டுப்படுத்துவதற்கும் மிகப் பெரிய வித்தியாசம் உள்ளது.


நாங்கள் பவர்பிளே ஓவர்களில் நன்றாக பந்து வீசினோம். ஆனால் விக்கெட்களை எடுக்கவில்லை. பவர்பிளே ஓவர்கள் கடந்த பின் எஞ்சிய 14 ஓவர்களில் எதிரணியினர் 180 ஓட்டங்கள் அடித்தார்கள். அது மிகவும் அதிகமானது. இந்தப் போட்டியில் 17 ஓவர்கள் வரை நாங்கள் நன்றாகவே துடுப்பாட்டம் செய்தோம். 240 ஓட்டங்களை துரத்துவது எளிது கிடையாது.

எங்களுக்கு தோல்வி கிடைத்தாலும் நிறைய நேர்மறையான விஷயங்கள் கிடைத்தன. குறிப்பாக ஷாருக்கான் மற்றும் ரூதர்போர்ட் ஆகியோருடைய துடுப்பாட்டம் மிகப்பெரிய நேர்மறையாகும். மீண்டும் வெற்றிப் பாதைக்குத் திரும்புவதே பிளேஒவ் சுற்றில் அசத்துவதற்குத் தேவையான சாவியாகும். பிளேஒவ் சுற்றுக்கு முன்பாக நாங்கள் மீண்டும் எப்படியாவது வெற்றிப் பாதைக்கு திரும்ப வேண்டும்- என்றார். (எ)




# 'பிளேஓவ்' தகுதி பெறாதது ஏமாற்றத்தை அளிக்கிறது

## மிட்செல் மார்ஷ் தெரிவிப்பு



அகமதாபாத், மே 24

குஜராத்துக்கு எதிரான ஆட்டத்தில் மிட்செல் மார்ஷ் சதம் அடித்து அசத்தினார். இந்த நிலையில் பிளேஒவ் சுற்றுக்குத் தகுதி பெறாதது ஏமாற்றத்தையளிக்கிறது என்று மார்ஷ் கூறினார்.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் குஜராத் - லக்னோ அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 20 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 235 ஓட்டங்கள் குவித்தது. லக்னோ தரப்பில் அதிகபட்சமாக மிட்செல் மார்ஷ் 117 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகன் விருது மிட்செல் மார்ஷ்க்கு வழங்கப்பட்டது. இதையடுத்து மிட்செல் மார்ஷ் அளித்த பேட்டியில் கூறியதாவது, ஐ.பி.எல் தொடரின் இடையில், நான் சில வருடங்கள் விளையாடவில்லை. தற்போது ஒரு வழியாக சதத்தை அடித்துள்ளேன். முதல் முறையாக நான் 2010ஆம் ஆண்டு டெக்கான் அணிக்காக விளையாடினேன். இது ஒரு நீண்ட பயணம். லக்னோ அணியில் தொடக்க வீரராக விளையாடும் வாய்ப்பு கிடைத்தது.

மார்க்ரமுடன் களத்திலும், களத்துக்கு வெளியேயும் நல்ல இணைப்பாட்டம் அமைத்துள்ளேன். ஐ.பி.எல் தொடருக்கு புத்துணர்ச்சியுடன் விளையாட வந்தேன்.

பிளேஒவ் சுற்றுக்குத் தகுதி பெறாதது ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. ஐ.பி.எல் தொடர் நல்ல போட்டி மிகுந்தது. அதில் சில போட்டிகளில் வெற்றியை நெருங்கிச் சென்றும் தவற விட்டதால் நாங்கள் பிளேஒவ் சுற்றுக்குத் தகுதி பெறாமல் வெளியேறினோம். ஐ.பி.எல் தொடரில் எந்த அணியும் தங்களுடைய நாளில் எந்த அணியையும் தோற்கடிக்கும். அதனாலேயே ஐ.பி.எல் உலகின் சிறந்த போட்டியாக இருக்கிறது- என்றார். (எ)

# 498 ஓட்டங்கள் குவித்து இங்கிலாந்து அசத்தல்

நாட்டிங்காம், மே 24

சிம்பாவேக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 498 ஓட்டங்கள் குவித்தது.

இங்கிலாந்து - சிம்பாவே அணிகள் இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாட்டிங்காமில் நேற்று முன்தினம் தொடங்கியது. இங்கிலாந்தின் தொடக்க வீரர்களாக பென் டக்கட் மற்றும் ஜாக் கிராவ்லி களம் புகுந்தனர். இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

பென் டக்கட்டும் ஜாக் கிராவ்லியும் முதல் விக்கெட்டுக்கு 231 ஓட்டங்கள் சேர்த்தனர். இதில் பென் டக்கட் 140 ஓட்டங்களிலும் ஜாக் கிராவ்லி 124 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து களம் புகுந்த ஆலி போப்பும் அதிரடியாக ஆடினார். இதனால் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.

மறுபுறம் ஜோ ரூட் 34 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதையடுத்து ஹாரி புரூக் களம் புகுந்தார். அதிரடியாக ஆடிய ஆலி போப்பும் சதம் அடித்து அசத்தினார். இறுதியில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 88 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 498 ஓட்டங்கள் குவித்தது. ஆலி போப் (169) ஹாரி புரூக் (9 ) ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

இந்த நிலையில், இந்த ஆட்டத்தில் ஜோ ரூட் 28 ஓட்டங்கள் எடுத்த போது டெஸ்ட் கிரிக்கெட்டில் 13, 000 ஓட்டங்களை கடந்தார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 13,000 ஓட்டங்களை கடந்த 5ஆவது வீரர் என்ற சாதனையை ஜோ ரூட் படைத்தார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் அடித்தவர்கள் பட்டியல் வருமாறு,

சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) - 15921,
ரிக்கி பொண்டிங் (அவுஸ்திரேலியா) - 13378,
ஜக் கலிஸ் (தென்னாபிரிக்கா) - 13289,
ராகுல் டிராவிட் (இந்தியா) - 13288,
ஜோ ரூட் (இங்கிலாந்து) - 13006,
அலஸ்டர் குக் (இங்கிலாந்து) - 12472 ஓட்டங்கள் எடுத்துள்ளனர். (எ)



# 124 ஓட்டம் வித்தியாசத்தில் அயர்லாந்து அணி வெற்றி



டப்ளின், மே 24

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் அயர்லாந்து அணி 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது.

இதன்படி முதல் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி பால்பிர்னியின் அபார சதத்தின் உதவியுடன் 50 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 303 ஓட்டங்கள் குவித்தது. பால்பிர்னி 112 ஓட்டங்களும் டெக்டர் 56 ஓட்டங்களும் பால் ஸ்டிர்லிங் 54 ஓட்டங்களும் அடித்தனர். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் மத்தியூ போர்ட் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பின்னர் 304 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணியால் அயர்லாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியவில்லை. வெறும் 34.1 ஓவர்களில் 179 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் அயர்லாந்து அணி 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் ரோஸ்டன் சேஸ் 55 ஓட்டங்கள் அடித்தார். அயர்லாந்து தரப்பில் மெக்கார்த்தி 4 விக்கெட்களும் ஜார்ஜ் டாக்ரெல் 3 விக்கெட்களும் வீழ்த்தி அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சரவையுடன்...

வடக்கு, கிழக்கில் நிலவும் காணிப் பிரச்னைகள் தொடர்பான கூட்டம் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இந்த சந்திப்பில் மக்கள் பிரதிநிதிகளுடன் வடக்கு, கிழக்கு மாகாண மாவட்ட அரச அதிபர்கள், திணைக்கள அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

வடக்கு மாகாணத்தில் காணிகளை சுவீகரிப்பது தொடர்பில் கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப் பெறவேண்டும். பொதுமக்களின் காணிகளையும் அரச காணிகளையும் வேறுபடுத்துவது என்பது கடினமான காரியம். காணிகளின் உரிமையாளர்கள் பலர் வெளிநாடுகளில் உள்ளனர். நாட்டில் இன்னமும் பயங்கரவாத தடைச் சட்டம் நடைமுறையில் இருப்பதால் அவர்களில் பலர் நாடு திரும்பமுடியாத நிலையிலுள்ளனர். வர்த்தமானியில் பிரகடனப்படுத்தியதன்படி பல காணிகள் கரையோரத்திலுள்ளன. 2004இல் ஏற்பட்ட சுனாமியால் பலரின் ஆவணங்கள் அழிவடைந்து போய்விட்டன. எனவே, இந்த வர்த்தமானியை மீளப் பெறவேண்டும் என்று வலியுறுத்தியதுடன், அதிலுள்ள சட்டப் பிரச்னைகளையும் இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நிஷாம் காரியப்பர் ஆகியோர் முன்வைத்தனர்.

தொடர்ந்து, "அரசாங்கம் அடாத்தாக காணிகளை அபகரிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. பொதுமக்களின் காணிகளை அவர்களிடமே வழங்க வேண்டும்", என்று சிறீதரன் எம். பி. கூறினார்.

வவுனியா வடக்கில் 10 ஆயிரம் ஏக்கர் காணிகளை வனமாக்கும் திட்டம் தொடர்பில் அவசரப்பட்டு வர்த்தமானி வெளியிடக்கூடாது. வவுனியா நகரில் 99 வருட குத்தகை அடிப்படையிலேயே முன்னர் காணிகள் வழங்கப்பட்டன. இந்தக் காணிகளுக்கு தற்போது உறுதி பெறப்படும்போது 2 பரப்பு காணிகளுக்கே உறுதி வழங்கப்படும் என்று தற்போது நிபந்தனை விதிக்கப்படுகிறது. இதனால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். காணி குத்தகைக்கு வழங்கப்படும்போதிருந்த நடைமுறையே பின்பற்றப்படவேண்டும். இறுதிப்போரின்போது சரணடைந்த மக்களை தங்க வைப்பதற்கு மெனிக்பாம் முகாம் அமைக்கப்பட்டது. இந்தக் காணி முன்னர் பல்வேறு திட்டங்களின் கீழ் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்தக் காணிகளின் உரிமையாளர்கள் பலர் வெளிநாடுகளில் உள்ளனர். தற்போது இந்தக் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. அங்கு இராணுவம் விடுதிகளை நடத்துவதுடன் விவசாய நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகிறது. இந்தக் காணிகள் மீண்டும் மக்களிடம் வழங்கப்படவேண்டும் என்று சத்தியலிங்கம் எம். பி. பிரதமரிடம் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து, திருகோணமலையில் அபகரிக்கப்படும் காணிகள் தொடர்பில் குகதாசன் எம். பி.யும், முல்லைத்தீவில் வனவளத் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களால் அபகரிக்கப்படும் காணிகள் தொடர்பில் ரவிகரன் எம். பி. யும் கூறினர். எனினும், இடையிலேயே இதனை நிறுத்திய பிரதமர், பிரதானமாக வடக்கில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட காணி தொடர்பில் பேசவே இந்த சந்திப்பு கூட்டப்பட்டது. நேரத்தை கருத்தில்கொண்டு அது தொடர்பிலேயே கலந்துரையாடுவோம் என்று கூறினார்.

இதனிடையே, சந்திப்பில் பங்கேற்றிருந்த காணி திணைக்களங்களின் அதிகாரிகள் வர்த்தமானி மீளப்பெறப்படவேண்டும் என்ற கருத்தை கடுமையாக எதிர்த்தனர். காணி ஆவணங்கள் இல்லையென்றால் மின் பட்டியல், வரி தொடர்பான ஆவணங்கள் அல்லது வேறு ஆவணங்களில் ஏதேனும் ஒன்றையேனும் மக்கள் ஆதாரமாகக் காட்ட முடியும் - என்றனர்.

மேலும், நாட்டுக்கு வரமுடியாத சூழ்நிலையிலுள்ளவர்கள் மெய்நிகர் வழியில் தொடர்பு கொள்ளமுடியும், கிராம சேவகர் மூலம் காணியை உறுதிப்படுத்தலாம், உறவினர்கள் ஊடாக காணி ஆவணத்தை சமர்ப்பிக்க முடியும். எனவே, வர்த்தமானியை மீளப்பெற முடியாது என்று கூறினர்

இதன்போது, 100 வருடங்களுக்கு முந்தைய காணிகளை அடையாளப்படுத்த இந்த நடவடிக்கை என்று கூறப்படுகிறது. அப்படியானால் தற்போதைய ஆவணங்கள் ஏற்கப்படுமா?

அரச மற்றும் தனியார் காணிகளை அடையாளப்படுத்தவே இந்த நடைமுறை என்றால் எதற்காக பொதுமக்களுக்கு தெரியப்படுத்தாமல், 3 மாத காலத்துக்குள் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்? அரசியல்வாதிகளும் ஊடகங்களும் இந்த விடயத்தை வெளிப்படுத்திய பின்னர்தான் இந்த விடயம் மக்களுக்கு தெரிய வந்துள்ளது. இன்னும் ஒரு மாத காலத்துக்குள் ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாது. மக்களுக்கு பகிரங்கப்படுத்தாமல் வர்த்தமானியை வெளியிட்டதன் நோக்கம் என்ன? இவ்வாறு கஜேந்திரகுமார், நிசாம் காரியப்பர் ஆகியோர் அதிகாரிகளை கேட்டனர். அவர்களின் இந்தக் கேள்விக்கு அதிகாரிகள் பதிலளிக்கவில்லை.

இதைத் தொடர்ந்து, "பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமிக்கும் நோக்கம் எமக்கு இல்லை. பொதுமக்களின் காணிகளிலிருந்து அரச காணிகளை வேறுபடுத்துவதே நோக்கம். அரச காணிகளில் பொது நோக்கிலான அபிவிருத்தித் திட்டங்களே மேற்கொள்ளப்படும்", என்று தெரிவித்த பிரதமர் ஹரிணி, "இந்த வர்த்தமானி தொடர்பாக அடுத்த பாராளுமன்ற அமர்வுக்குள் அமைச்சரவையில் பேசி முடிவு ஒன்று எட்டப்படும். அடுத்த பாராளுமன்ற அமர்வின்போது மீண்டும் உங்களை (வடக்கு - கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை) சந்திக்கும்போது பதிலளிக்கிறேன்", என்று உறுதியளித்தார். (ஐ)

## மின்சாரம்...

(வயது 48) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த குடும்பஸ்தர், நேற்று முன்தினம் பூவரச மரத்தில் தடி வெட்டியுள்ளார். வெட்டப்பட்ட தடி மின்கம்பியில் விழுந்து அவருடன் தொடுகை ஏற்பட்டது. இதையடுத்து, அவர் மின்சாரத்தால் தாக்குண்டு தூக்கிவீசப்பட்டு, அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்ட அவரின் சடலம் உடற்கூற்றாய்வு பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவ மனையில் ஒப்படைக்கப் பட்டது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபால சிங்கம் மேற்கொண்டார். (ஐ-05)

## நல்லூர்...

இது தொடர்பில் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன.

இதனிடையே, உணவகத்தின் பெயர் பலகை நேற்று முன்தினம் யாழ். மாநகர சபையால் அகற்றப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## இனப்படுகொலை...

மாட்டீர்கள். இந்த அரசாங்கம் கடந்த கால அரசாங்கங்களை இனவாதிகளாக சித்திரித்து, அவர்களில் இருந்து நாம் மாறுபட்ட வர்கள் என்று கூறுகிறது.

ஆனால், இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை என்ற கருத்தை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் திரும்பப் பெறவேண்டும். அவரின் இந்த கருத்து மிகவும் ஆபத்தானது. இந்த நாட்டில் ஒரு சுயாதீன விசாரணையை நடத்தி, நீதியை வழங்குமாறு நாம் கேட்கிறோம். சர்வதேச விசாரணை மாத்திரமே சுயாதீன விசாரணையாக இருக்கும். ஏன் நீங்கள் அதிலிருந்து தப்பி ஓட முயற்சிக்கின்றீர்கள்?" -என்றும் கேட்டார். (ஐ)

# பஸிலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே 24

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு விசாரணையை எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு மாத்தறை பிரதான நீதிவான் அருண புத்ததாச உத்தரவிட்டுள்ளார்.

மாத்தறை - ப்ரவுன்சில் பகுதியில் 1.5 ஏக்கர் நிலத்தை 5 கோடி ரூபாய்க்கு கொள்வனவு செய்தமை தொடர்பான வழக்கே நேற்று வெள்ளிக்கிழமை இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டது.

பஸில் ராஜபக்ஷ சுகவீனமுற்று வெளிநாட்டில் தங்கியுள்ளார் என்று அவரின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு இதன்போது தெரிவித்திருந்தனர்.

பஸல் ராஜபக்ஷவின் மனைவியின் சகோதரியான புண்ய காந்தி என்பவரின் பெயரில் இந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் 2017 ஆம் ஆண்டு நிதி குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மெய்நிகர் நீதிமன்ற...

வசதிகள் வெகுவிரைவில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை, பாராளுமன்றத்தில் குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டு மக்கள் நீதிமன்றத்துக்கு செல்ல விரும்புவதில்லை. சட்டத்தரணிகள் மற்றும் நீதிபதிகள் மாத்திரமே நீதிமன்றத்துக்கு செல்ல விரும்புகிறார்கள். அதுவும் அங்கு அவர்கள் தொழில் புரிவதால். சாட்சியாளர்கள் நீதிமன்றத்துக்கு செல்ல விரும்புவதில்லை. வழக்கை பிற்போடல், அலைக்கழிதல் ஆகியவற்றால் நீதிமன்றத்துக்கு செல்வதற்கு பொது மக்கள் விரும்புவதில்லை. நீதிமன்றங்களில் நேரம் வீண்விரயமாக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நீதிமன்ற கட்டமைப்புக்குள் தோற்றம் பெற்றுள்ள சிக்கல்களுக்கு ஓர் அரசாங்கமோ, அந்த அரசாங்கத்தின் நீதி அமைச்சர்களோ, பொறுப்புக்கூற வேண்டியதில்லை. காலம் காலமாகவே இந்த பிரச்னைகள் தோற்றம் பெற்றுள்ளன. ஆகவே, இவற்றுக்கு தீர்வு காணும் பொறுப்பு தற்போதைய அரசாங்கத்துக்கு உண்டு.

வழக்கு விசாரணைகள் தாமதமடைதல் மற்றும் வளங்கள் வீண்விரயமாதல் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். நவீன தொழில்நுட்ப வசதிகளை நீதிமன்ற கட்டமைப்புக்குள் கொண்டு வரும் வகையில் இந்த திருத்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் ஏதேனும் வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது வாதியும் இருக்க வேண்டும், பிரதிவாதியும் இருக்க வேண்டும், சந்தேக நபரும், சாட்சியாளரும் நீதிமன்றத்தில் இருக்க வேண்டும். சாட்சிக் கூண்டில் இருந்து சாட்சியமளிக்க வேண்டும். இவர்களில் எவரேனும் நீதிமன்றத்தக்கு சமுகமளிக்காவிடின் வழக்கு பிற்போடப்படும். இதனால் அன்றைய தினம் வருகை தந்திருந்த ஏனையவர்கள் அனை வரும் பாதிக்கப்படுவார்கள்.

இந்தப் பிரச்னைக்கு தொழில்நுட்ப ரீதியில் தீர்வு காணும் பொருட்டு இந்தத் திருத்தச் சட்டமூலம் ஆக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தின் 144ஆவது பிரிவில் "நீதிமன்றத்தில் தனிப்பட்ட முறையில் முன்னிலையாகமல் மெய்நிகர் வழிமுறையில் முன்னிலையாகலாம் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று அனைவரின் கைகளிலும் ஸ்மார்ட் தொலைபேசிகள் உள்ளன. சந்தேக நபர்களையும், சாட்சியாளர்களையும் நீதிமன்றத்துக்கு அழைத்து வராமல் மெய்நிகர் வழிமுறைமையின் ஊடாக வாக்குமூலம் பெற்றுக்கொள்ளலாம். மெய்நிகர் வழிமுறைக்கு சட்ட அந்தஸ்து வழங்கத் தீர்மானித்துள்ளோம் - என்றும் கூறினார். (ஐ)

## பெருந்தொகை

சேர்ந்தவர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், வவுனியா குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் போகஸ்வெவ - சலினிகம கிராமத்தில் வீடு ஒன்றில் நேற்று சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது, 2 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து நடத்தப்பட்ட சோதனையில் ரி -56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் ரவைகள் -256, எம்-16 துப்பாக்கிகளுக்கான ரவைகள் -19, ரி-56 துப்பாக்கி ரவை கூடுகள், ரி -56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் பயிற்சி ரவைகள் 124, 9எம்.எம். கைத்துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் வெற்று ரவைகள் 365, ரி -56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப்பட்ட 24 வெற்று ரவைகள் மற்றும் விசேட அதிரடிப் படை சீருடைகள், அதற்கான பிரத்தியேக பொருட்கள், காலணிகள் என்பனவும் மீட்கப்பட்டன.

விசாரணைகளில் வீட்டின் உரிமையாளர் விசேட அதிரடிப்படையை சேர்ந்தவர் என்றும், இந்தப் பொருட்களை அவரே மறைத்து வைத்திருந்தார் எனவும் தெரிய வந்தது. இதையடுத்து அவரும் அவருக்கு உடந்தையாக செயல்பட்டவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-10)

## சுதந்திர...

குடியிருப்பு தொகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி கைப்பற்றப்பட் டது. இது தொடர்பில், 40, 68 வயதான பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரூ.20லட்சம்...

முறையான கணக்காய்வு அத்தியாவசியமானது. இரு தரப்பு மற்றும் பல தரப்பு கடன்கள் பெறப்படுகின்றன. கடன் பெறுவதை போன்று, கடன் முகாமைத்துவமும் அத்தியாவசியமானது.

கடந்த காலங்களில் எந்த வரையறையுமின்றி வெளிநாட்டு அரசமுறை கடன்கள் பெறப்பட்டன. பெறப்படும் கடன்களால் செயல்படுத்தப்படும் கருத்திட்டம் என்ன, அந்த கருத்திட்டத்தால் வினைத்திறனான பிரதிபலன்கள் கிடைக்கப்பெறுமா என்பது முறையாக ஆராயப்படவில்லை. பெறப்படும் கடன்களையும் கொள்ளையடிக்கும் கலாசாரமே காணப்பட்டது.

2026இன் முதல் காலாண்டளவில் அரச நிதி முகாமைத்துவ பணிமனை நிறுவப்பட்டு, நிதி விவகாரங்கள் குறித்து புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். மத்திய வங்கியின் ஒத்துழைப்பு பெறப்படும். கடந்த காலங்களில் பெறப்பட்ட அரசமுறை கடன்களுக்கு நேர்ந்தது என்னவென்பது இப்போது கணக்காய்வாளர் திணைக்களத்தால் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட வெளிநாட்டு அரசமுறை கடன்களில் சுமார் 20 இலட்சம் கோடி ரூபாய் வரையிலான நிதி என்ன வாயிற்று என்பதற்குரிய ஆவணங்கள் மற்றும் குறிப்புகள் ஏதும் கிடையாது. இவ்விடயம் குறித்து கணக்காய்வு திணைக்களம் ஊடாக விசேட நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், சிங்களப் பாடங்கள் பாடசாலைகளில் கட்டாயம்

## பிரதமர் ஹறிணி அறிவிப்பு



கொழும்பு, மே. 24

**ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான சிங்கள மாணவர்கள் தமிழை இரண்டாவது மொழியாகவும், தமிழ் மாணவர்கள் சிங்களத்தை இரண்டாவது மொழியாகவும் கற்கவேண்டியது கட்டாயமாக்கப்படவுள்ளதாக பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் நேற்றையதினம் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதன்படி, ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியை இரண்டாம் மொழியாக கற்க வேண்டும்.

அதேவேளை, ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக கற்க வேண்டும்.

ஆசிரியர்களுக்கு குறித்த மொழிகளைக் கற்பிக்க பயிற்சி அளிக்கப்படும் வரை இந்தத் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார். (அ)

# வெளிநாடுகளில் உள்ள முக்கிய குற்றவாளிகளை கைது செய்ய இலங்கை அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, மே. 24

வெளிநாடுகளில் தலைமறைவாக உள்ள 20 ஆபத்தான குற்றக் கும்பல் உறுப்பினர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சந்தேக நபர்களை கைது செய்ய ஏற்கனவே சிவப்பு அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும், சர்வதேச பொலிஸாருடன் இணைந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் வசிக்கும் நாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களை நாடு கடத்துவதற்கு வசதியாக இராஜதந்திர முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால உறுதிப்படுத்தினார்.

"விசாரணைகளை விரிவுபடுத்த வெளியுறவு அமைச்சகத்துடன் நெருக்கமாகப் பணியாற்றி வருகிறோம்," என்று அமைச்சர் ஆனந்த விஜேபால சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரை, குற்றவியல் வலையமைப்பைச் சேர்ந்த 11 பேர் வெற்றிகரமாக இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டு உள்ளூர் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் கொலை, போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிற கடுமையான குற்றங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கின்றனர்.

குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் பொலிஸ் சிறப்புப் பணிக்குழு ஆகியவை இணைந்து வெளிநாட்டைச் சேர்ந்த மற்றும் உள்நாட்டில் செயல்படும் கும்பல் உறுப்பினர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (அ)

# தேசிய கல்வியிற் கல்லூரிகளுடன் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளையும் இணைத்து பயிற்சி

கொழும்பு, மே. 24

தேசிய கல்வியிற் கல்லூரிகளுடன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் இணைத்து பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக பிரதமரும் கல்வி, உயர்கல்வி அமைச்சருமான ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் தேசிய மக்கள் சக்தி எம்.பி ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாடளாவிய ரீதியில் 8 ஆசிரிய பயிற்சி கல்லூரிகள் உருவாக்கப்பட் டுள்ளன.

கிராகம ஆசிரியர் பயிற்சி கல்லூரி பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு 150 பேருக்கு அங்கு பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான ஆசிரியர் பயிற்சி மூலம் அவர்களது திறமையை அபிவிருத்தி செய்வதற்கு இந்த வருடத்தில் விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்வியிற் கல்லூரிகளுடன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் இணைத்து பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

அந்த வகையில் 2175 பயிற்சியாளர்களை இணைத்து பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம்,

சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்களின் விடுதி வசதிகளை அதிகரித்து அவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்கும் வகையில் இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# கொழும்பில் எங்கள் ஆட்சி சஜித் அணியும் விடாப்பிடி

கொழும்பு, மே. 24

"கொழும்பு மாநகரசபையின் ஆட்சியை அரசாங்கத்துக்கு வழங்கபோவதில்லை. எதிரணிகளின் ஒத்துழைப்புடன் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியே மலரும்."-என்று பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-கொழும்பு மாநகர சபை தொடர்பில் கட்சிகளுடன் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றோம். பல கட்சிகள் எமக்கு ஆதரவு வழங்கியுள்ளன. எனவே, கொழும்பில் ஆட்சியை அரசாங்கம் இழக்கும்.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்த சில சுயாதீனக் குழுக்கள் எம்மையும் சந்தித்துள்ளன. எனவே, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலேயே கொழும்பு மாநகரில் ஆட்சி அமையும். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவரே மேயர் வேட்பாளராக நிறுத்தப்ப டுவார். ஏனைய கட்சிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும். உரிய வகையில் சரியான முடிவு எடுக்கப்படும்-என்றார். (அ)

# மக்கள் ஆணையை அரசு காட்டிக் கொடுத்துள்ளது!

## சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 24

சர்வதேச நாணய நிதிய இணக் கப்பாட்டில் திருத்தங்களைச் செய்வோம் எனக் கூறி பெரும்பான்மை அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட தற்போதைய அரசாங்கம், அந்த ஆணையை இப்போது காட்டிக் கொடுத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் நேற்று பாராளுமன்றில் எழுப்பிய கேள்விய போது எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதனை தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2024 ஜனாதிபதித் தேர்தலின் போது, தற்போதைய அரசாங்கம், "வளமான நாடு, அழகான வாழ்க்கை" எனும் கொள்கை பிரகடனம் ஊடாக நாணய நிதியத்துடன் புதிய கடன் நிலைபேற்றுத்தன்மை பகுப்பாய்வு இணக்கப்பாட்டை எட்டுவதன் மூலம் முந்தைய அரசாங்கத்தால் மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட அழுத்தத்தைக் குறைப்பதாக தற்போதைய அரசாங்கம் தேர்தல் பிரசாரத்தின் போது வாக்குறுதி அளித்தது.

மக்கள் நம்பிக்கை வைத்த சர்வதேச நாணய நிதியத்துடன் மிகவும் சாதகமான இணக்கப்பாடுகள் மூலம் புதிய தோற்றப்பாட்டை அடைய தற்போதைய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ஆணையை அரசாங்கம் சரியாகப் பயன்படுத்துகிறதா என்பது தற்சமயம் பிரச்னைக்குரியதாக காணப்படுகிறது - என்றார். (அ)

# கிளி. விவசாயிகளுக்கு உர மானியமாக இதுவரை 190 ரூபா மில்லியன் வைப்பில்!

கொழும்பு, மே.24

கிளிநொச்சி மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டு சிறுபோக செய்கைக்காக அரசாங்கத்தின் உரமானியமாக இதுவரை 6,200 விவசாயிகளுக்கு 7,600 ஏக்கர் நிலப்பரப்புக்காக 190 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்கதிபர் எஸ். முரளிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் சிறுபோக செய்கை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

""கிளிநொச்சி மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டு சிறுபோக செய்கையாக 10,800 ஹெக்டேயரில் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் போதிய மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளது. குளங்களில் போதுமான அளவு நீர் காணப்படுகின்றது.

2025 இல் சிறுபோக செய்கைக்காக உரமானியமாக இதுவரை 6,200 விவசாயிகளுக்கு 7,600 ஏக்கர் நிலப்பரப்புக்காக 190 மில்லியன் ரூபா வைப்பில் இடப்பட்டுள்ளது.

ஏனைய விவசாயிகளுக்கு அவர்களின் விபரங்கள் சரிபார்க்கப்பட்டு கமநல சேவை நிலையங்கள் மூலம் முன்னெடுக்கப்படுகிறது-என்றார். (அ)

# ஜனாதிபதி ஜேர்மனுக்கு உத்தியோகபூர்வ விஜயம்

கொழும்பு, மே. 24

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜேர்மனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அடுத்த மாதம் 10 ஆம் திகதி அவர் ஜேர்மனிக்கு பயணமாகவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி முதலில் இந்தியாவிற்கும் அதனைத் தொடர்ந்து சீனாவிற்கும் விஜயம் மேற்கொண்டார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ/க்கு விஜயம் மேற்கொண்ட பின்னர், ஜனாதிபதியின் முதல் ஐரோப்பிய பயணமாக ஜேர்மனுக்கான உத்தியோகபூர்வ விஜயம் அமையும். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org